
# லண்டன் முரசு

Vol 7 — LONDON MURASU — FEBRUARY 21st 1977 — No 8

அமரர் பக்ருதீன் அலி அகமது



PATRONS PLEASE NOTE THAT WE HAVE MOVED TO A LARGER PREMISES WITH A MUCH WIDER SELECTION OF SAREES



**For Sarees**

**visit**

# SAREE BOUTIQUE

197 UPPER TOOTING ROAD
LONDON SW17
TEL: 01 - 672 6537
(OPPOSITE: R.A.C.S)

LATEST SPECIALITY

FANTASTIC SELECTION IN PRINTED A-TELL, AMERICAN GEORGETTE, WOLLEY GEORGETTE, KANJEEPURAM, BANARAS, & KASHMIR SAREES, READY-MADE, CHIFFON & GAJJI BLOUSES, PETTICOATS, SAREE BORDERS & COSTUME JEWELLERY ETC.. ETC..

# லண்டன் முரசு

தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை
-பாரதிதாசன்.

ஆசிரியர் •
ச.ம.சதானந்தன் B.Sc.(Econ)(Lond.)

சிறப்பாசிரியர்கள்
கி.ஞானசூரியன் M.Sc. (Lond.), ARIC
அரங்க முருகையன்

ஓவியர்கள்.
கோ.ஜம்பு, பக்கீர் M.Sc.(Lond.)


நிருபர்கள்.

தமிழ்நாடு டி.செல்வராஜன்(சென்னை), ஆ.ஞானசேகரன் M.Sc(மதுரை)
கேரளம் எஸ்.எஸ்.மணி B.com. பிரான்சு செய்யது மௌலானா
மைசூர் ஆர்.கண்ணன் B.A., B.O.L. மலேசியா பொ.பாலகோபால் B.A., B.L.
மொரீஷியஸ் எம்.தங்கமுத்து கனடா கே.வெங்கட்ராமன்
அயர்லாந்து டாக். ஸ்ரீ.வேங்கடேசன் B.Sc., A.I.C. மான்செஸ்டர் ஆர்.எல்.சிவம் B.Sc.

முரசு 7 மாசி தி.ஆ 2008 பிப்ருவரி 21 1977 ஒலி 8




| | |
|---|---|
| ஆசிரியருரை | 2 |
| தாய்நாடுகளின்செய்திகள் | 3 |
| சிதறியசெய்திகள் | 5 |
| முன்னேறும்அறிவியலில் | 7 |
| மேற்குநாடுகளின்செய்திகள் | 9 |
| திரைக்குவந்தவை | 12 |
| சிறப்புநாட்குறிப்பு | 12 |
| நண்பர்கள்நடுவில் | 13 |
| திருக்குறள் | 14 |
| சிறுமிகிற்கூட்டங்கள் | 15 |
| நிழற்படத்தில்செய்திகள் | 20 |
| இலக்கியம் | 24 |
| தமிழ்த்தொண்டர்கள் | 26 |
| அன்புள்ளஆசிரியருக்கு | 27 |
| கவிதை | 29 |
| நூல்நிறை | 30 |
| பேட்டி | 31 |
| NEWSGRAM | 36 |
| NEWS IN BRIEF | 37 |
| EXAMINATIONS | 38 |
| LETTERS TO EDITOR | 38 |
| CLASSIFIEDS | 39–40 |

மேற்கு நாடுகளின் முதன்முதல் தமிழ்த் திங்கள் ஏடு. இலாப நோக்கின்றி நடத்தப்படும் பிரசுரம். லண்டன் முரசு பிரசுரத்தால் வெளியிடப்பட்டது.

# இரு மலைகள் சாய்ந்தன

உப கண்டத்தின் இரு தலைவர்கள் மறைந்துவிட்டனர். இந்திய நாட்டின் தலைசிறந்த தேச பக்தர் ஜனாதிபதி பக்ருதீன் அலி அகமது ஒரு நல்ல மனிதர், பெரியமனிதர், நாட்டின் எல்லா மக்களாலும் மதிக்கப்பட்ட ஒருவர். இந்தியநாட்டின் ஒருமைப் பாட்டிற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருந்தார். அவர் மறைந்துவிட்டார்! அதேவேளை ஈழத் தமிழினத்தின் இந்த நூற்றாண்டின் தலைசிறந்த தலைவர்களுள் ஒருவரான திரு.ஜீ.ஜீ.பொன்னம்பலமும் மறைந்துவிட்டார்! இலங்கையின் வரலாற்றிலேயே தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்துக்கொண்ட திரு.ஜீ.ஜீ. பொன்னம்பலம், தனது அறிவினாலும், ஆற்றலினாலும், பல சாதனைகளை நிலைநாட்டியவர். ஆங்கிலேயரின் காலத்தில் நாட்டின் சுதந்திரத்துக்காகப் போராடினார். சுதந்திரத்துக்குப் பின்னர் தமிழ்பேசும் மக்களின் விமோசனத்திற்காகவும் பின்னர் விடுதலைக்காகவும் பாடுபட்டார். தமிழர்களுக்கு அரசியல் சுதந்திரம் மட்டும் போதாது பொருளாதார சுதந்திரமும் **வேண்டும்** என்பதை உணர்ந்து அதைச் செயல்படுத்தியவர் அவர். தொழில் அமைச்சராக அவர் இருந்த காலத்தில் அவரது மிகவும் உயர்ந்த முயற்சிகளின் பயனாக காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலை-இவற்றை நிறுவி தமிழ் ஈழத்தின் பொருளாதார வளத்திற்கு அவர் அடிகோலினார். ஈழத்தமிழர்கள் ஒன்றுபட்டு தமிழர் விடுதலைக் கூட்டணி அமைத்தபோது தனது தமிழ்க் காங்கிரஸ் கட்சியை, தமிழர் ஒற்றுமையை முன்வைத்து, கூட்டணியுடன் இணைத்து தமிழினத்தின் ஒருமைப்பாட்டிற்கு வழிகாட்டினார் திரு.ஜீ.ஜீ.பொன்னம்பலம்.

இந்திய ஜனாதிபதியின் மறைவு குறித்து மேற்குநாடுகளில் எப்படி அதிக அக்கறை காட்டப்படவில்லையோ, அதேபோன்ற ஒரு குறைந்தளவு அக்கறையை சிங்கள அரசு திரு.ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் மறைவின்போது காட்டித் தமது மதிப்பைக் குறைத்துவிட்டது. ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரையில் ஒரு மாபெரும் நாட்டின் ஜனாதிபதியும், தமிழினத்தின் முடிசூடா மன்னரும் மறைந்தமை அதிர்ச்சியாகவேஇருக்கும்.

# ஈழ விடுதலை வீரர்கள்

தமது இனம், நாடு விடுதலைபெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் பலசிறை வாசங்களைப்பெற்று துயருற்றுப் பின் சிறைமீண்டவர்களை தேசபக்தர்கள், தலைவர்கள் என்று விடுதலைபெற்று வந்த நாடுகளில் போற்றப்பட்டு வந்தமை வழக்கமாகிவிட்டது. ஈழத் தமிழினத்தின் விடுதலை என்ற உயர்ந்த இலட்சியத்தை மனதில்வைத்துப் போராடி இத்தனை ஆண்டுகள் சிறையிலிருந்து தற்போது விடுதலையடைந்துள்ள கவிஞர் காசிஆனந்தன், பொ.சத்தியசீலன் போன்ற தமிழ் இளைஞர்கள் ஈழத் தமிழர்களது தன்மானச் செல்வங்கள். அவர்கள் விடுதலைபெற்று வெளியே வந்துவிட்டார்கள். இனித்தான் அவர்களுக்குக் கூடிய பொறுப்பும், கடமையும் ஏற்படப்போகின்றன. நான்கு சுவர்களுக்குள் பாதுகாப்புடன் இருந்த இந்த விடுதலை வீரர்கள் தமிழ் ஈழத்தின் ஒற்றுமைக்கும், உண்மையான விடுதலைக்கும், தமது இலட்சியங்கள் நல்லபடியாக நிறைவேறவும் மிகுந்த கண்காணிப்புடன் இயங்கவேண்டும். அவர்களிடையே ஒற்றுமை, ஒருமையுள்ளநோக்கம், அவர்களது செயல்களில் ஒருதிடமை, அவர்களுக்குப் பாதுகாப்பு இவற்றையெல்லாம் அவர்களுக்கு அளிக்கவேண்டியது ஏனைய தமிழர்களின் கடமையாகின்றது.

# தாய் நாடுகளின் செய்திகள்



## தமிழர் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் மறைவு

ஈழத்தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களில் ஒருவரும் ஈழத்தின் தலைசிறந்த சட்டமேதையுமான திரு.ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் மலேசியாவின் ஈப்போ மருத்துவ மனையில் காலமானார். அவருக்கு வயது 76. அவர் காலமாகும்போது அவரது மனைவி மகன் குமார் பொன்னம்பலம், மகள் திருமதி டாக்டர் சிவப்பிரகாசம்பிள்ளை ஆகியோர் கூட இருந்தனர்.

இலங்கையின் தமிழ் காங்கிரஸ் கட்சியைத் தாபித்த திரு.ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் முதன் முறையாகப் பருத்தித்துறைத் தொகுதியின் எம்.பி.யாக தெரிவு செய்யப்பட்டார். சோல்பரி கமிஷன் இலங்கையின் அரசியல் திட்டத்தை வரையும் போது தமிழ்பேசும் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் 50க்கு 50 ஆட்சியில் பங்கு இருக்கவேண்டும் என உரிமைப் பிரச்சனை எழுப்பினார். சுதந்திரத்துக்கு முன்னர் சிலகாலம் வேலைப் பகுதி அமைச்சராக இருந்திருக்கிறார். சுதந்திரத்துக்குப்பின் டி.எஸ்.சேனநாயகாஅமைத்த அரசில் மீன்பிடி, மற்றும் தொழில் அமைச்சராக இருந்துள்ளார். ஈழவிடுதலைத் - தமிழர் கூட்டணி அமைக்கப்பட்டபோது தமிழர் ஒற்றுமை நலன் குறித்து தமிழரசுக் கட்சியுடன் காங்கிரஸ் கட்சியை முழுமையாக இணைத்து விடுதலைக் கூட்டணிகளின் தலைவர்களுள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் திரு.பொன்னம்பலம். தமிழகத்தின் முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்கள் மீது தொடரப்பட்டுள்ள கோதுமை பேர வழக்கில் திரு.ஜி.ஜி.பொன்னம்பலம் கலைஞருக்கு ஆதரவாக வாதாடினார்.

## இறுதி யாத்திரையில் மக்கள் சோகவெள்ளம்

பல்லாயிரக் கணக்கான மக்கள் சோகமே உருவெடுத்து நிற்க தமிழர்களின் மாபெரும் தலைவர்களில் ஒருவரான திரு.ஜி.ஜி யின் பூதவுடல் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு ஊர்வலத்தில் எடுத்துச்செல்லப்பட்டது. மலேசியாவிலிருந்து கொழும்பிற்குக் கொண்டுவரப்பட்ட அமரர் ஜி.ஜி.யின் பூதவுடலுக்கு மரியாதை செலுத்தும்வண்ணம் ஜனாதிபதி கோபால்லவ, பிரதமர் சிறிமாவோபண்டாரநாயக்கா ஆகியோர் வந்து அஞ்சலி செலுத்திச் சென்றனர்.

யாழ்ப்பாண மாநிலத்தின் பலாலி விமானநிலையத்தில் ஜி.ஜி யின் பூதவுடல் கொண்டுவரப்பட்டபோது விமானத்திடலில் பெருந்தொகையான மக்கள் வந்திருந்து கண்ணீர் சிந்தினர். 'உதயசூரியன்' கொடி, பூச்சரங்கள், மலர் வளையங்கள், ஜி.ஜி யின் படம் இவற்றால் அலங்கரிக்கப்பட்டிருந்த வெண்ணிற ரதத்தில் பேழை வைக்கப்பட்டது. பின் யாழ்ப்பாணத்திற்கு பலாலியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பூதவுடல் ஊர்வலத்தில் எடுத்துச்செல்லப்பட்டது. வீதிக்கு வீதி மக்கள் மலர் வளையங்களைச் சாத்தினர்.

யாழ்ப்பாணத்தில் வீரசிங்கம் மண்டபத்தில் அமரரின் பூதவுடல்வைக்கப்பட்டிருந்தது. இறுதிச் சமயச் சடங்குகள் வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்னுள் அமைக்கப்பட்டிருந்த மேடையில் நடைபெற்றது. திரு.செல்வநாயகம் அவர்கள் முதல் தமிழர்களின் அனைத்துத் தலைவர்களும், மற்றும் தபால் அமைச்சர் குமாரசூரியர், எதிர்கட்சித் தலைவர் ஜே.ஆர்.ஜயவர்த்தன ஆகியோரும் சமயச் சடங்குகளின்போது மேடைக்கருகில் நின்றனர். சமயச்சடங்கு கரணவாயைச்சேர்ந்த திருஞான சம்பந்தக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. முன்னைநாள் உதவிஅமைச்சர் வி.குமாரசாமியும், பதில் நீதவான் கனகரத்தினமும் பக்திப் பாடல்களைப் பாடினர். திருமதி.மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் முதலானோர் திருப்பொற்சுண்ணம் பாடல்களைப் பாடினர். யாழ்ப்பாணத்திலிருந்து திரு.ஜி.ஜி யின் சொந்த மாவட்டமான பருத்தித்துறை மாவட்டத்தின் கடற்கரைக்கு எடுத்துச்செல்லப்பட்டது. வெள்ளை ரதத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து மோட்டார் ரத பவனியாக கொண்டுவரப்பட்ட தலைவரின் பூதவுடலுக்கு மரியாதை செலுத்தும் வண்ணம் 25மைல் நெடுகலும் மக்கள் வரிசையாக நின்றிருந்தனர். பருத்தித்துறையின் கடற்கரையில் அண்ணாரின் சிதைக்குத் தீ வைக்கப்பட்டபோது அங்குகூடியிருந்த மக்கள் "தலைவா எம்மை விட்டுச் செல்லுகின்றாயா" எனக் கதறிக் கலங்கினர்!



## இந்திய ஜனாதிபதி காலமானார்

இந்திய நாட்டின் ஜனாதிபதி டாக்டர் பக்ருதீன் அலி அகமது அவர்கள் பிப்ருவரி 11ந்தேதியன்று காலமானார். அவருக்கு வயது 72. மலேசிய நாட்டுக்கு வருகை தந்திருந்த குடியரசுத் தலைவர் உடல்நலம் குன்றவே புதுடெல்லிக்குத் திரும்பினார். மாரடைப்பால் அவர் மயக்கமடைந்த நிலையில் இறந்தார். அவர் இறக்கும்போது அவரதுமனைவி பேகும் அபிதா அம்மையாரும், காங்கிரஸ் தலைவர் பருவாவும் அருகில் இருந்தனர். துணை ஜனாதிபதி திரு. ஜட்டி அவர்கள் தற்காலிக ஜனாதிபதியாக சத்தியப் பிரமாணம் எடுத்துள்ளார்.

ஜனாதிபதி பக்ருதீன் அலி அகமது அவர்களின் மறைவு குறித்து 13நாள் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. 1974ம் ஆண்டு ஆகஸ்டு 24ந்தேதி டாக்டர் அகமது அவர்கள் இந்தியாவின் ஐந்தாவது ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். ஜனாதிபதி அவர்களின் ஜனாஸா நல்லடக்கம் பூரண இராஜாங்க மரியாதைகளுடன் டில்லி அருகிலுள்ள பள்ளிவாசலில் பிப்ருவரி 13ந்தேதியன்று நடைபெற்றது. மூவர்ணத் தேசியக் கொடியினால் போர்த்தப்பட்டிருந்த ஜனாதிபதியின் பூதவுடல் பீரங்கி வண்டியில்வைக்கப்பட்டு எடுத்துச்செல்லப்பட்டது. வெளிநாடுகளின் விசேட பிரதிநிதிகள், ராஜ தந்திரிகள் பிரமுகர்கள், அரசியல் தலைவர்கள், பொதுமக்கள் ஆகியோர் திரண்டு நிற்க ஜனாஸா நல்லடக்கம் அமைதியாகவும், சிறப்பாகவும் நடைபெற்றது.

(படங்களுக்கு நிழற்படத்தில் செய்திகள் பக்கம் பார்க்கவும்)





## காசி ஆனந்தனும் சத்தியசீலனும் விடுதலை!

தமிழ் ஈழத்தின் விடுதலைக்காகப் போராடி சிறைசென்ற தமிழ் வீரர்களான காசி ஆனந்தன், சத்தியசீலன் முதற்கொண்டு அனைத்து விடுதலை வீரர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். விடுதலை செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களின் பெயர்கள் வருமாறு: கவிஞர் காசிஆனந்தன் பொ.சத்தியசீலன், புஷ்பராசா, வண்ணை ஆனந்தன், மாவை சேனாதிராசா, ஆனந்தகுமார், ஜீவராசா, பரமேஸ்வரன், சதானந்தசிவம், இரத்தினகுமார், தனபாலசிங்கம், பொ.வே.திசைவீரசிங்கம், பூபதிபாலவடிவேற்கரசன், பூ.நடேசானந்தன், உரும்பராய் மகேந்திரன், வரதராசா, பிரான்சிஸ் ஆகியோர். இவர்களில் சத்தியசீலன், நடேசானந்தன், திசைவீரசிங்கம், ஆகியோர் 4 வருடங்களுக்கு மேலாக சிறையில் வைக்கப்பட்டிருந்தனர். விடுதலை வீரர்கள் சிறையிலிருந்து வெளியாகியதும் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் கொழும்பின் தமிழ் இளைஞர் பேரவையினர் நடத்திய மாபெரும் கூட்டம் ஒன்றில் பேசினார்கள். இரயில் மூலம் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு — இரு ஈழத்தமிழ் நகரங்களுக்கும் முறையே சென்ற விடுதலை வீரர்களுக்கு, தமிழ் ஈழமெங்கும் வழிநெடுகவும் வரவேற்பும் வீரகோஷங்களும் அவர்களை வரவேற்றவண்ணமிருந்தன. புகையிரத நிலையங்களில் அளிக்கப்பட்ட வரவேற்புகளாலும் சனத்திரளாலும் இரயில் பலமணி நேரம் கால தாமதித்தே யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை அடைந்ததாம்.

## இந்தியப் பொதுத்தேர்தல்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி 492 தேர்தல் தொகுதிகளிலிருந்து போட்டியிடுகின்றன. மொத்தம் 542 தொகுதிகள் உள்ளன. மிகுதி 50தொகுதிகளிலும் ஏனைய கட்சிகளுடன் உள்ள உடன்படிக்கையின்படி காங்கிரஸ் அபேட்சகர்கள் நிறுத்தப்படவில்லை. காங்கிரசுக்கு எதிரான ஜனதாகட்சி 394 தொகுதிகளில் போட்டியிடுகின்றது. ஜனதாவின் நட்புறவுக் கட்சிகளான தி.மு.க, ஜகஜீவன்ராமின் புதிய கம்யூனிஸ்டு, ஜனநாயக காங்கிரஸ் கட்சி, அகாலி தால் ஆகியவற்றிற்கு 134 தொகுதிகளில் ஜனதா கட்சி ஆதரவளிக்கின்றது. தமிழகத்தில் உள்ள 39 தொகுதிகளிலும் மொத்தமாக 195பேர் போட்டியிடுகின்றனர். சில தொகுதிகளில் போட்டியிடும் முக்கிய கட்சிகளின் பிரமுகர்கள் விபரங்கள்:

| | |
|---|---|
| மத்திய நிதி அமைச்சர் சி.சுப்பிரமணியம் | (காங்கிரஸ் — பழனி) |
| முன்னாள் தமிழக அமைச்சர் ஆர்.வெங்கட்ராமன் | (காங்கிரஸ் — சென்னை தெற்கு) |
| முரசொலி மாறன் | (தி.மு.க — சென்னை தெற்கு) |
| நாஞ்சில் மனோகரன் | (அ.இ. அதிமுக — சென்னை வடக்கு) |
| ஏ,வி,பி. ஆசைத்தம்பி | (திமுக — சென்னை வடக்கு) |
| பழைய காங்கிரஸ் தலைவர் பி. இராமச்சந்திரன் | (மத்திய சென்னை) |
| கம்யூனிஸ்டு கட்சி தலைவர் கல்யாணசுந்தரம் | (திருச்சி) |

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சிக்கும் அ.இ.அ.தி.மு.க விற்கும் ஏற்பட்ட உடன்பாட்டில் காங்கிரஸ் 15 தொகுதிகளிலும் அ.இ.அ.தி.மு.க விற்கும் தோழமைக் கட்சிகளுக்கும் 24 இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. தமிழகத்திலும் புதுவையிலும் தி.மு.கவிற்கும் ஜனதா கட்சிக்கும் இடையில் உள்ள உடன்பாட்டின்படி இரு கட்சிகளும் 19— 19 தொகுதிகளில் போட்டியிடுகின்றன. மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சி 2 தொகுதிகளில் போட்டியிடுகின்றன.

பி.கு: பலதரப்பட்ட தேர்தல்களிலும் எப்போதும் போட்டியிடும் திரு.டி.வி.அங்கண்ண செட்டியார் இம்முறை தேர்தலிலும் போட்டியிடுகின்றார். இவர் இம்முறை 20 தொகுதிகளில் போட்டியிடத் திட்டமிட்டுள்ளாராம்.

## கருணாநிதிமீது குற்றம் சர்க்காரியா கமிஷன் தீர்ப்பு

தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி மீது சாட்டப்பட்டிருந்த ஊழல் குற்றச்சாட்டுகளில் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டார் என சர்க்காரியா கமிஷன் மத்திய அரசிடம் கொடுத்த முதல் அறிக்கையில் தெரிவித்துள்ளது. இந்த அறிக்கையின் அடிப்படையில் திரு. கருணாநிதி மீது மத்திய அரசு நடவடிக்கை எடுப்பது பற்றி யோசித்து வருகின்றதாம்.

## தமிழ்பேசும் எம்.பிக்களுடன் இலங்கைப் பிரதமர் சமாதானப் பேச்சுவார்த்தைகள்.

ஈழத்தின் தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும்பொருட்டு சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்த தமிழர் தலைவர்களை அழைத்துள்ளார் திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கா. சமாதான மாநாடு பிப்ருவரி 21ந்தேதியன்று கொழும்பில் உள்ள பண்டாரநாயக்கா சர்வதேச நினைவு மண்டபத்தில் நடைபெறும். தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பிரதமரைச் சந்தித்துப் பேசுவதற்கு ஆமோதித்துள்ளனர்.

## தனிநாடு கோரிக்கையையே முன்வைப்பர்

21ந்தேதி நடைபெறும் மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி பா.உக்கள் வட்டுக்கோட்டை மாநாட்டுப் பிரகடனத்தை — அதாவது தனிநாடு கோரிக்கையை — மட்டுமே வலியுறுத்தவிருக்கின்றனர். தமிழர் விடுதலைக் கூட்டணி பா.உக்களின் சார்பில் இந்த மாநாட்டின்போது திரு.சி.கதிரவேற்பிள்ளை மட்டுமே பேச்சாளராக இருக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# சிதறிய செய்திகள்

**** சென்னையின் எண்ணூற்றில் இங்கிலாந்தின் ஐ.சி.ஐ.கம்பனியார் 11கோடிருபாய் செலவில் மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைக்கின்றது.

**** மாமனூர் சிதம்பரம் ஜெயராமன் வீட்டில் குடிபோதையுடன் கலாட்டா செய்த கருணாநிதியின் மகன் மு . க.முத்து கைது செய்யப்பட்டார். அவரைக் கைதுசெய்த மாம்பலம் பொலிசார் அவரை ஜாமீனில் விடுதலை செய்துள்ளனர்.

**** தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவராக சிவாஜிகணேசன் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

**** பிரபல நடிகை சுஜாதா உடல் நலமின்றி சென்னையில் உள்ள தனியார் மருத்துவ மனையொன்றில் சேர்க்கப்பட்டுள்ளார். தொடர்ந்து நடைபெற்ற படப்பிடிப்புக்களில் கலந்துகொண்டதால் அவர் களைப்பு அடைந்ததாகக் கூறப்பட்டுள்ளது. தூக்கமாத்திரைகளைச் சாப்பிட்டுத் தற்கொலை செய்ய முயன்றதாக வெளிவந்த செய்திகளை அவர் மறுத்துள்ளார்.

**** சௌகார் ஜானகியின் வீட்டில் உவரது விலையுயர்ந்த கமெராவை திருடியதாக ராஜேந்திரா என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

**** மதுரையில் நடைபெற்ற சமாபந்தி போஜனத்தில் 250 அரியல மக்களுடன் சிவாஜிகணேசனும் அவரது மனைவியும் உட்கார்ந்து சாப்பிட்டனர்.

**** இலங்கையின் மாங்குளம் அருகில் உள்ள துணுக்காய் கிராமத்தில் துப்பாக்கிகள் சகிதம் கோஷ்டியொன்றுநுழைந்து பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றனர். பொலீசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

**** கொழும்பின் அருகிலுள்ள தெய்வலை மிருகக் காட்சிச் சாலைக்கு தினமும் ஒரு விருந்தாளி வந்து சென்றுகொண்டிருந்தார். அந்த விருந்தாளி ஒரு ஒற்றைக் கையுடைய குரங்காகும். குரங்குகளின் கூண்டுகளுக்கு வெளியே நின்று இந்தக் குரங்கு கூத்தாடிக் கொண்டிருப்பதைப் பார்த்த காவலாளகள் வியந்துவிட்டனர். தினமும் காலையில் வந்து மாலையில் செல்லும் இக்குரங்கு வருவதும் போவதும் பஸ்வண்டியில் தானும். பஸ்சில் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் இந்த ஒற்றைக்கை குரங்கை அநுதாபத்துடன் கவனித்து வந்தார்களாம்.

**** ஈழத்தின் கல்குடா தொகுதியின் கதிரவெளி, பால்சேனை, பன்றித்தீ, புன்னைக்காடு, கல்லித்தீவு, மாங்கேணி , காயாங்கேணிப் பகுதிகளில் சிங்களவ மீனவர்கள் மெதுமெதுவாகக் குடியேறி வருகின்றார்களாம்.

**** வாணி பரியின் முன்னாள் டிறைவர் முத்து என்பவர் தனது மனைவியை வெட்டிப் படுகொலை செய்ததாகக் கைது செய்யப்பட்டுள்ளார்.

**** பொள்ளாச்சியைச் சேர்ந்த நங்கவேலு என்பவருக்கு உத்தரப் பிரதேச லாட்டரியில் பதினைந்தேகால் லட்சம் ருபாய் பரிசு கிடைத்துள்ளது. இவர் ஒரு பஸ் கண்டக்டர்.

**** ஈழத்தின் கல்முனையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிளை இயக்கத்தினர் "கனல்" என்னும் பத்திரிகையை ஆரம்பித்துள்ளனர்.

**** இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கொழும்பு வளாகத்திலிருந்து 46புதிய டாக்டர்கள் தேர்வு பெற்றுள்ளனர். அதில் 23பேர் தமிழ்பேசும் டாக்டர்கள். அவர்களில் 16பேர் பெண்கள் 7பேர் ஆண்கள்.

---


## அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார்



கோயில் அறங்காவலர் குழு (TRUSTEES) லண்டன் U.K அன்பர்களை ஒரு நீர்த்தாங்கி அமைக்கும் திருப்பணிக்கு உதவுமாறு வேண்டியுள்ளனர்.:

திருப்பணிக்கு உதவ விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: — —

சி. ஞானசூரியன் 01 — 531 —6435,
செயலாளர், லண்டன் கும்பழாவளைத் திருப்பணிக்குழு.

## கோயில் திருப்பணி.

****** தமிழக அரசின் ஆளுநரின் மூன்றுவது ஆலோசகராக திரு.வி.கார்த்திகேயன் நியமிக்கப் பட்டுள்ளார். இவர் தமிழக அரசின் தலைமைச் செயலராக இருந்து வந்தார். இரண்டாவது செயலராகப் பணியாற்றி வரும் திரு. சி.வி.ஆர்.பணிக்கர் தற்போது தலைமைச்செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். தமிழக ஆளுநரின் மற்றைய இரு ஆலோசகர்கள்: திரு.சுப்ரமண்யம், திரு. தவே ஆகியோராகும்.

****** சென்னையில் நடைபெற்ற அனைத்திந்திய விளையாட்டுப்போட்டியில் தமிழ்நாடு 16தங்கப்பதக்கங்களைப்பெற்று முதலிடம் பெற்றது. தவிர 11 வெள்ளிப் பதக்கங்களும் தமிழ்நாட்டிற்குக் கிடைத்துள்ளது.

****** தி.மு.க வைச் சேர்ந்த நடிகர் எஸ் எஸ் ராஜேந்திரன் எம்.ஜி ராமச்சந்திரனின் அகில இந்திய அ.தி. மு கவில் சேர்ந்து கொண்டார். மற்றும் தி.மு.க எம் பிக்களான வலம்புரி ஜான், காதர்ஷா ஆகிய இருவரும் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துகொண்டனர்.

****** தேவரின் "நல்ல நேரம்" படத்தில் நடித்த யானை 300அடி பள்ளத்தாக்கொன்றில் விழுந்து இறந்தது.

****** சென்னையின் புகழ்பெற்ற மெரீனாக் கடற்கரையில் ரூபாய் 28லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கலங்கரை விளக்கத்தை மத்திய அமைச்சர் டாக்டர், தில்லான் திறந்துவைத்தார். 190அடி உயரமுள்ள இந்தக் கவர்ச்சிகரமான கலங்கரை விளக்கத்தை கடலில் 20மைல் தொலைவிலிருந்து பார்க்கமுடியுமாம். கலங்கரை விளக்கத்தினுள் மின்சாரப்படிகள் போன்ற வசதிகள் உண்டாம்.

****** மறைந்த நடிகை ராகினியின் பெயரில் சென்னையில் கலைமன்றம் ஒன்று கட்டப்படவுள்ளது. விமான விபத்தில் இறந்த நடிகை ராணிசந்திராவின் நினைவாக அவரது சொந்த ஊரான கொச்சினில் ரூ4லட்சம் செலவில் கலை அரங்கம் ஒன்று கட்டப்படுகிறது.

****** உலகில் மிக அதிகமான மக்கள் வாழும் நகரமென இதுவரை புகழ்பெற்றிருந்த டோக்கியோ (மக்கள்தொகை 86½ இலட்சம்)(ஜப்பான்) இப்போது அச்சிறப்பைச் சீனத்து ஷங்கய் நகருக்கு(மக்கள்தொகை ஒரு கோடி எட்டேகால் இலட்சம்) வழங்கிவிட்டது. மூன்றும் இடம் பெறுவது மெக்சிகோ நகர் (86இலட்சம்) ; நான்காமிடம் நியூயார்க்குக்கு ( 77 இலட்சம்) ; ஐந்தாமிடம் சீனத்துப் பீகிங்குக்கு ( 76இலட்சம்) ஆறுமிடம் தான் லண்டனுக்கு ( 73இலட்சம்).

****** பிள்ளை பெறும் கணக்கில் முதலிடம் செனிகலுக்கும், கருச்சிதைவில் முதலிடம் அமெரிக்காவுக்குமென அனைத்துலகக் கூட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

****** பல பள்ளிகளில் ஆசிரியராகவும், தலைமையாசிரியராகவும் திகழ்ந்து ஓய்வுபெற்றுத் தற்போது வழக்கறிஞரா கவிழங்கும் திரு.வைத்தியநாதன் என்ற தமிழர் சிங்கப்பூர்ப் பொதுவேலை நியமனக்குழுவின் உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

****** தஞ்சை மாவட்ட முற்போக்கு எழுத்தாளர் சங்க முதலாண்டுக்கூட்டம் அண்மையில் கும்பகோணத்தில் சிறப்பாக நிகழ்வுற்றது.

****** மொரிஷியசின் தலைநகரிலுள்ள சொக்கலிங்கம் மீனாட்சி அம்மன் கோவில் புனர்நிர்மானத்துக்கு மொரிஷியஸ் அரசு ரூபாய் 1லட்சம் நிதி அளித்துள்ளது. கட்டிட வேலைகளை தமிழகத்திலிருந்து வரவழைக்கப்படும் சிற்பிகள் மேற்பார்வை செய்வர்.

****** டைரக்டர் பாலச்சந்தர் தயாரித்து வெளியிடவிருக்கும் "அவர்கள்" படத்தில் மேற்குநாடுகளின் தொலைக்காட்சிகளில் வருவது போன்ற பேசும்பொம்மை (வென்ட்ரிலாகிஸம்) கூத்துக்காட்சிகள் வருகின்றது. ஆனல் இந்தப் பொம்மை இந்தியாவில் கிடைக்கவில்லை. வெளிநாட்டில் வந்து வாங்கிச்செல்ல பாலச்சந்தர் யோசித்துப் படப்பிடிப்பையே ஒத்திவைக்க வேண்டியதாயிற்று. கடைசியாக பொம்மையும் கிடைத்து படப்பிடிப்புமீண்டும் தொடங்கியுள்ளது. தமிழகத்தில் "அவர்கள்" படம் வெளியிடும் தேதியும் இப்போது தள்ளிப்போடப்பட்டுள்ளது.

****** இலங்கையின் கூட்டு அரசின் முக்கிய அங்கத்தினராக அங்கம் வகித்து வந்த கம்யூனிஸ்டு கட்சி கூட்டணி அரசை விட்டு வெளியேறி விட்டது. இப்போது சிறிலங்கா சுதந்திரக்கட்சி தனியே அரசை நடத்தி வருகின்றது.

****** இலங்கையின் தமிழ் தொழிற்சங்கங்களில் ஒன்றுன அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் தலைமைக் கட்டிடம் ஈழத்தின் எல்லை நகரான வவுனியாவில் எழுப்பப்பட்டு வருகின்றது. இரண்டு மாடிக்கட்டிடமான இந்தச் செயலகம் 5லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகின்றது. தமிழர் கூட்டணித்தலைவர் அமிர்தலிங்கம் தமிழ் மரபு முறைப்படி கட்டிடவேலைகளை ஆரம்பித்துவைத்தார்.

****** மலேசியாவில் நடைபெற்ற உலக இந்து மாநாட்டில் உலக இந்து இளைஞர்பேரவை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. உலக இந்துமாநாட்டின் தலைமைச் செயலர் பேராசிரியர் டி.எம்.பி.மகாதேவா, இதன்படி மதுரை மாநாட்டில் இளைஞர் பகுதிக்கான சிறப்புக் கருத்தரங்கு ஒன்றை நடத்த ஒப்புக்கொண்டுள்ளார்.

****** இலங்கையின் மலையகத்தில் உள்ள சுவீகரிக்கப்படாமல் இருந்த 770 தோட்டப் பாடசாலைகளையும் இலங்கை அரசு தேசியமயமாக்கி உள்ளது. இதற்கான உத்தரவை அமைச்சர் டாக்.பதியுதீன் மஹற்மூத் விடுத்துள்ளார்.

****** இலங்கையில் குற்றம் புரிந்த ஒருவர் பொலிசாரிடம் அகப்படாமல் உலகில் எந்த நாட்டிலும் ஒளித்துத் தலைமறைவாக இருந்தாலும் அவர்களை அங்கு வைத்துப் பலவந்தமாகக் கைதுசெய்து இலங்கைக்குக் கொண்டுவர சட்டம் ஏற்படுத்தும் வண்ணம் மசோதா ஒன்று தேசிய அரசுப் பேரவையில் கொண்டுவரப்பட்டுள்ளது . பொதுநலவமைப்பு நாடுகள் உட்பட சகல வெளிநாடுகளுடனும் இலங்கை அரசு இதற்கான ஒப்பந்தங்களைச் செய்யவிருக்கின்றது.

****** கோவை செழியன் தலைமையில் இயங்கி வரும் அண்ணு.தி.முகழகம் தனித்தே போட்டியிட முடிவு செய்துள்ளது. எம்.ஜி.ஆர் தலைமையிலான அனைத்திந்தியஅதி.மு.கழகம் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து போட்டியிட முடிவுசெய்துள்ளது.

# பிரான்சியரின் புதுமைப் புரட்சி

~ விஜயேந்திரன் (லண்டன்)

மறைந்த, பிரெஞ்சுத் தலைவரான ஜோர்ஜஸ் பொம்பிடோ பாரி மாநகர் கலைகளின் உறைவிடமாகத் திகழ வேண்டுமென்று கனவுகண்டார். நூற்றாண்டு காலமாக மேற்குத் திசையின் இணையற்ற ஓவியர்களின் புகலிடமாகிப் புகழ்பெற்ற பாரிமாநகர் இந்த நூற்றாண்டில் தன்புகழை நியூயார்க்கிடம் இழந்து, வெறும் தலைநகராகமட்டும் மாறி வருவதைக் காணச் சகிக்காத அந்த ஓவிய ரசிகர் நவீன ஓவியங்களின் கலைக்கோயிலொன்று பாரிசில் அமைக்கப்பட வேண்டுமென்ற தன் அவலை வெளியிட்டார். இது நடந்தது 1969ல்.

பிப்ருவரி முதல்வாரத்தில் பிரெஞ்சுக் குடியரசுத் தலைவர் தெஸ்தேங்கினால் திறந்துவைக்கப் பட்டிருக்கும் ஜோர்ஜஸ் பொம்பிடோ தேசிய கலை கலாச்சாரக்கூடம் (CENTRE NATIONAL D'ART ET DE CULTURE) மறைந்த குடியரசுத் தலைவருக்கான மக்களின் காணிக்கை என்பதனால் மட்டும் சிறப்படைந்துவிடாது கலைகளின் புதுமையைப் பிரதிபலிக்கும் இக்கலைக்கோயில் கட்டிட நிர்மாணத்திலும் கூட ஒரு புதிய பரிமாணத்தை எட்டியிருக்கிறது!


புதுமையாக ஒன்று செய்யவேண்டும் என்பதில் பிரான்சியரின் ஆர்வம் அளவில்லாதது. அமெரிக்க சுதந்திர தேவி சிலை, ஐபல்கோபுரம், ரேய்சியில் அமைந்த சார்லஸ் டிகால் விமானத்தளம் என்று அடுக்கிக்கொண்டே போகலாம். ஆனால் மென்மையும் கலையழகும் மிக்க தொன்மையான பிரெஞ்சுப்பாணிக்கும் இன்றைய கலைக்கோயிலுக்கும் தான் எவ்வளவு வித்தியாசம்! பொம்பிடோ தனது கனவுக் கலைக்கூடம் கலைகளின் உறைவிடமாக நூலகமாக மட்டுமெல்லாது மாறும் புத்துலகின் ஒருபுதுமைப் பலகணியாகவும் அமையவேண்டும் என்று கனவுகண்டார். இதனைச் செயல்படுத்த முன்வந்த பிரெஞ்சு அரசு புதுமையைப் பிரதிபலிக்கப் போகும் கலைக்கூடம், அமைப்பிலும் ஒருபுதிய பாணியை எட்ட வேண்டும் என்று எண்ணி அனைத்துலகக் கட்டிடக் கலைஞர்களினதும் எண்ணத்தை அறிய விழைந்தது. இப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள் இருவர்; ஒருவர் இத்தாலியைச் சேர்ந்த ரென்ஸோ பியானோ, மற்றவர் இங்கிலாந்தின் ரிச்சர்ட் ரோஜர்ஸ். "ரசிகர்கள் வரவேண்டும் என்பது மட்டும் எங்கள் எண்ணம் அல்ல. அவர்கள் மலைக்கவும் வேண்டும் என்று எண்ணினோம். அதன் விளைவே இக்கட்டிடம்" என்கிறார் ரிச்சர்ட் ரோஜர்ஸ். கண்ணாடிச் சுவர்களும், இரும்புக்குழாய்களும் மட்டும்தான் சாரீரம், எலும்புக்கூடு எல்லாம் எனலாம். ஆறு அடுக்கு மாளிகை, பாஸ்டைல்லுக்கும் லே ஹாலஸ்சுக்கும் இடையே பீபோர் (BEAUBOURE) என்னுமிடத்தில் எழத் தொடங்கியது. கட்டிடத்தைத் தாங்கி வலுப்படுத்திச், சூறாவளிபோன்ற இயற்கைக் காரணிகளிடமிருந்து காக்கும் எலும்புக்கூடு (STRUCTURAL SUPPORTS) போன்ற கட்டிட அமைப்பை முழுக்க முழுக்க வெளியே தெரியும் வண்ணம் அமைத்திருக்கிறார்கள் கட்டிடக் கலைஞர்கள். அத்துடன் நீர், மின்சக்தி, குளிர்சாதனம் (AIR CONDITION) ஆகியவற்றுக்கான குழாய்கள் கண்ணைப்பறிக்கும் வண்ணங்களில்பூசப்பட்டு வெளியே அமைத்திருக்கின்றார்கள். அத்தோடு நின்றுவிடவில்லை ரோஜர்ஸ். தரையிலிருந்து கூரைவரை, சிவப்புக் கண்ணாடிச் சுவர்களுடன் ஒரு விசைப் படிக்கட்டையும் கூட (ESCALATORS) கட்டிடத்தின் வெளியே பொருத்தியிருக்கிறார் அவர்! "இந்தக் கட்டிடம் ஒரு நவீன நகர யந்திரம் (A MODERN URBAN MACHINE)" என்பதே இதற்கு அவர் கொடுக்கும் விளக்கம்!!

இதே சமயம் இது கிண்டல்களையும் கண்டனங்களையும் எழுப்பாமலில்லை. "பீதிக்குள்ளாக்கும் அளவுக்கு விகாரமாக இருக்கிறது" என்கிறார் பிரான்சின் கட்டிடக் கலைஞர் (பெண்) தலைவியான சோலன் டெறபஸ் (SOLANGE D'HERBEZ). கண்டனங்களுக்குக் காரணம் கட்டிடத்தின் உருவாக்கச் செலவும் (196 மில்லியன் அமெரிக்க டாலர்) வருடாந்தச் செலவும் (26 மில்லியன் டாலர்) தான். பிரான்சின் அத்தனை கலைக்கூடங்களுக்குமான வருடாந்தச் செலவு பொம்பிடோ கலைக்கூடத்தின் வருடாந்தச் செலவிலும் குறைவு என்பது இன்னொருகாரணம்! எனினும் அனைத்துலகக் கலைக்கூடங்களில் தலைசிறந்தவற்றுள் ஒன்று என்ற பெயரை பொம்பிடோ கலைக்கூடம் பெற்றுவிடும் என்று நம்புகிறார் இயக்குநராக அமர்த்தப்பட்டிருக்கும் ஸ்வீடனைச்சேர்ந்த பொன்டெஸ் ஹல்டன். புதுமையாகப் படைக்கப்பட்ட சிறிய யந்திரங்கள், கருவிகள் முதல் பாரிய நகரங்களின் மாதிரிகள்வரை அனைத்தும் ஒரு அரங்கில் (INDUSTRIAL CREATION CENTRE) காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும்; நவீன ஓவியங்களின் காட்சியரங்கு; பத்து லட்சம் நூல்களைக் கொண்ட நூலகம் இசையரங்கு ஆகியவற்றுடன் அமைந்துள்ள இம்மாளிகை (பரப்பு 25 ஏக்கர்) இரவு பத்துமணி வரை திறந்திருக்கும். இன்னொரு விசேஷடம் — 200 காவலாளர்களில் அனைவரும் பெண்கள்! "இதனால் ரசிகர்கள் மிரள மாட்டார்கள்" என்கிறார் ஹல்டன் வேடிக்கையாக.

கட்டிட வேலைகளின்போது...வேது அடுக்கு. →



பாம்புபோல் ஏறும் விசைப்படிக்கட்டு,.. பொம்பிடோ கலைக்கூடம்



BRING YOUR FAMILY



*Exquisite-South Indian & Malaysian Dishes.*

DHOSAI-MASALA DHOSAI -SAMBAR,
RICE & CURRY, ETC..

MALAYSIA & SINGAPORE
**Restaurant**

306 EARL'S COURT ROAD,
LONDON, S.W.5
Telephone: 01-370 2445

Nearest tube Earls Court.

AND FRIENDS TOO

BROADWAY MUSIC CENTRE
E5, E6 BROADWAY MARKET, TOOTING BROADWAY
LONDON SW17
FOR TAMIL, TELUGU & MALAYALAM
RECORDS
Come and See Around
We take orders for Cassettes & Records
TEL: 01-672 7403
PROP: A. AZIZ

OVERSEAS TRAVEL
CONSULTANTS
(INSURANCE & INVESTMENT CONSULTANTS)

CONSULT US FOR ECONOMY FARES TO
**Colombo & the Far East**

T. THIYAGALINGAM
18 NIGHTINGALE LANE
LONDON SW12
01-675 1415

# மேற்கு நாடுகளின் செய்திகள்

## லண்டன் தமிழர்களுக்கு சொந்தமாக ஒரு முருகன் கோவில்!
## பிரித்தானிய இந்துக் கோவில் அறநிலையத்தினர் பேச்சுவார்த்தை ஆரம்பம்!!

லண்டனின் தமிழர்களுக்கு என சொந்தமாக முருகன் கோவில் கட்டுவதற்கு என கட்டிடம் ஒன்றை வாங்குவதற்குப் பிரித்தானிய இந்துக்கோவில் அறநிலையத்தினர் பேச்சு வர்த்தைகள் ஆரம்பித்துள்ளனர்! கோவிலின் கட்டிடத்தையும் பார்வையிட்டு வாங்குவதற்கான பேச்சுவார்த்தைகளையும் ஆரம்பித்துள்ளனர்! கட்டிடம் லண்டன் நகருக்குள்ளேயே அமையவிருக்கின்றது. கட்டிடத்தை வாங்கி அதே இடத்தில் கோபுரங்கள், மூலஸ்தானம், சிவ — விஷ்ணு மண்டபங்கள், கலாச்சார மண்டபம், நூல்நிலையம், போன்றவற்றைக்கொண்ட கோவில் ஒன்று நிறுவப்படுமோம். கோவிலின் முக்கிய வேலைகளை திருமலை — திருப்பதி தேவஸ்தானத்தினர் மேற்பார்வையுடன் செய்து தருவார்கள். இந்தச் செய்தியைத் தெரிவித்த அறங்காவலர்கள் விரைவில் கூடிய விபரங்களை வாசகர்களுக்குத் தெரிவிக்க இருக்கின்றார்கள். பல்லாயிரக்கணக்கான பவுண்கள் செலவில் கட்டப்படவிருக்கும் கோவில் திருப்பணிக்கு இதுவரை அறநிலையம் முழுமையாக இங்கிலாந்தில் மட்டுமே நிதி சேர்த்து வந்துள்ளது. "இந்நாட்டுத் தமிழர்களின் கோவில் இந்த நாட்டு மக்களின் ஆதரவுடனேயே நிறுவப்படவேண்டும் என்றும், இனமாகாண ரீதியில் பிரிவினை இன்றி இந்தநாட்டில் உள்ள அனைத்துநாட்டுத் திராவிட மக்களும் சேர்ந்து கட்டவேண்டும் என்ற அடிப்படையிலேயே கோவில் நிறுவப்படுகின்றது" எனவும் அறங்காவலர்கள் தெரிவித்துள்ளனர். திருப்பணி வேலைகள் குறித்தும், அங்கத்தினராகச் சேர விரும்புவோரும் தயங்காது விபரங்கள் அறிய முன்வரும்படி அறங்காவலர்கள் தெரிவித்துள்ளனர். தற்போது வெள்ளிதோறும் இரவு 8மணிமுதல் 10மணி வரை நடைபெறும் முருகன் பூஜைகளில் கலந்து கொண்டு வேலைகளில் கூடியளவு ஈடுபடும் படியும் அறங்காவலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். வெள்ளி இரவுதோறும் நடைபெறும் பூஜை, வழிபாடுகள் ஒவ்வொரு தமிழ்க் குடும்பத்தினதும் உபயமாகவே நடைபெறுகின்றது. முருகன் பூஜை நடைபெறும் இடம்: KENNETH BLACK MEMORIAL HALL, WORPLE ROAD, WIMBLEDON, LONDON SW19. (FRIDAYS 8.00PM ONWARDS)

பிரித்தானிய இந்துக்கோவில் அறங்காவலர் நிலையத்தின் பதிவு முகவரி: BRITTANIA HINDU TEMPLE TRUST, 8 ASHEN GROVE, WIMBLEDON, LONDON SW19 8BN. (தொ. பே: 01-946 3374)

<u>தமிழ்ப்படக் கழகத்தின் நன்கொடை</u>

முருகன் கோவில் நிதிக்கென பிரித்தானிய தமிழ்ப்படக் கழகத்தினர் நடத்திய பாரதவிலாஸ் படத்திலிருந்து £500 பணத்தை நன்கொடையாக அளித்துள்ளனர். படக்கழகத்தின் இயக்குனர்களில் ஒருவரான திரு. சிறீனிவாசன் அண்மையில் £500 காசோலையை அறங்காவலர்களிடம் அளித்துள்ளார்.

<u>பரதநாட்டிய நிகழ்ச்சி</u>

தமிழ்த் திரைப்படக் கலாச்சார சங்கத்தினர் முருகன் கோவில் நிதிக்கென பரதநாட்டிய நிகழ்ச்சியொன்றை எதிர்வரும் ஏப்ரல் 16ந்தேதி நடத்துகின்றனர். சென்னையில் சிறப்பாக அரங்கேற்றம் நடத்திய ஜெனீவா மங்கையான செல்வி மஞ்சுளா நரசிம்மனின் பரதநாட்டிய நிகழ்ச்சி விம்பிள்டனின் KENNETH BLACK MEMORIAL மண்டபத்தில் நடைபெறுகின்றது.

### லண்டனின் வால்தம் ஃபொரெஸ்ட் நூல்நிலையத்தில் தமிழ்நூல்கள்!
### <u>அனைத்துலக தமிழ் மறுமலர்ச்சி நிலையத்தின் முயற்சி</u>

"தமிழ்மொழி இன்றேல் தமிழ் இனம் இல்லை. தமிழர் கலை இல்லை. இன்றைய சிறுவர்கள் நாளைய தமிழ்ச் சமுதாயத்தை வழிநடத்துவதற்கு தாய்மொழியே துணை" என்ற அடிப்படையில் அனைத்துலக மறுமலர்ச்சி நிலையத்தின் திரு. ஞானசூரியன் அவர்கள், சிறுவர்கள், பெரியவர்கள் ஆகிய அனைவரும் படித்துப் பயன்பெறும் வகையில் 83தமிழ் நூல்களை வால்தம் ஃபொரெஸ்ட் நூல்நிலையத்தினர் வரவழைத்துள்ளனர். இவற்றை, வேறு லண்டன் நூல்நிலையங்கள் மூலம் கூடப் பெற்றுக் கொள்ளலாம்.

### லண்டன் தமிழ்- திருச்சபையினரின் ஈஸ்டர் பூஜை
### <u>பி.பி.சி தமிழோசையில் ஒலிபரப்பாகும்!</u>

இவ்வாண்டு நடைபெறும் ஈஸ்டர் பூஜை வழிபாடுகளை பி.பி.சி தமிழோசை நிறுவனத்தினர் வானொலியில் ஒலிபரப்பாக்கின்றனர். லண்டன் தமிழ்த் திருச்சபையினரின் ஈஸ்டர் பூஜை எதிர்வரும் ஏப்ரல் 10ந்தேதி ஞாயிறன்று 4.00மணிக்கு நடைபெறுகின்றது. பூஜை நடைபெறும் இடம்: PUTNEY METHODIST CHURCH, GWENDOLENE AVENUE, PUTNEY, LONDON SW15.

## கிழக்கு லண்டனில் லண்டன் தமிழ்ப் பெருமக்களின் புரட்சிப் பொங்கல் விழா

— அறிவுச்சுடர் (லண்டன்)

லண்டன் தமிழர் முன்னேற்றக் கழகத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவும், லண்டன் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி முதலாம் ஆண்டு நிறைவு விழாவும் ஈஸ்ட் காம் – மேனர் பார்க் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி இல்லத்தில் (T.C.C. EAST AVENUE) த.மு.க.தலைவர் திரு.மா.கி.மூர்த்தி அவர்களின் தலைமையில் துவக்குமுன் சிறுவர்களுக்கான விளையாட்டுப்போட்டிகள் நடைபெற்றது; 40க்கு மேற்பட்டவர்கள் கலந்து சிறப்பித்த போட்டியில் நடுவர்கள் திருவாளர்கள்: காளிமுத்து, கவி.ஞானசூரியன், இராமதாசு ஆகியவர்கள் தங்களின் கடமைகளை சிறப்புற ஆற்றியது குறிப்பிடத்தக்கது. விளையாட்டுப்போட்டிக்குப் பின் புரட்சிப் பொங்கல் புத்தாண்டு விழாவின் துவக்கமாக தமிழ்த்தாய் வணக்கப்பாடலுடன் துவங்கியது. வரவேற்புரை நிகழ்த்திய திருமிகு சுப.சேகர் அவர்கள் அனைவரையும் வரவேற்று த.மு.க கடந்த ஓராண்டுகாலமாக அரசியல் துறையில் அயர்ந்திருந்து வந்த உலகத்தமிழர்கள் விழிப்புற்று எதையும், ஏன், எதற்காக என்ற அளவுக்கு சிந்தித்துப் புரட்சி விடுதலை புரட்சியை செயல் முறையிலே நடத்திட முன்வரும் அளவுக்கு ஆற்றிய பல ஆக்ககரமான செயல்களையும் எடுத்தியம்பினார்கள். தலைவரின் தலைமையுரையில் கலை, பண்பாடு.வழமை பழமை எனப்பேசி நமது சந்ததிகளை வாழ்க்கையின் கடந்தகால நடந்துமுடிந்த பகுதிகளுக்கு அழைத்துச் செல்வதை விடுத்து, நாளைய நமது நிலையையும் நமது மொழி நாடு எப்படி அமைந்திட வேண்டுமென்ற சிந்தனையில் ஆக்ககரமான செயல்களில் ஈடுபடவேண்டிய முறைகளையும், இன்று நம் தமிழ் ஈழமும், தமிழகமும், ஆதிக்க வெறியர்களின் பிடியில் சிக்கி அழிவதை தடுக்கும் முறைகளை தெரிவிக்கும் ஒரு புரட்சி உரையை நிகழ்த்தினார்கள். சிறப்புச் சொற்பொழிவாளர்களாக: குமாரிகள்: ரெ.குமுதா, ரெ. கீதா, (தி.வ.பள்ளி ஆசிரியைகள்) ஆகியவர்கள் இந்நாட்டில் தமிழ்மொழி என்பது பற்றியும், பொங்கல் பெருவிழா புரட்சிப் பொங்கலாக இருத்தல் வேண்டும் என்றும் முறையாகச் சொற்பொழிவாற்றினார்கள். இராமதாசு எம்.ஏ.அவர்களின் உரையில் உணவு உற்பத்தியின் வழித்தோன்றலான தமிழினம் அன்றுதொட்டே நன்றிக் கடனாக உணவு உற்பத்திக்கு உறுதுணையாக இருந்த அனைத்துக்கும் நன்றிசெலுத்தி மகிழும் இவ்விழாவை தி.வ.ஆண்டான இப்புத்தாண்டு தினத்தில்கொண்டாடுவது சிறப்புக்குரியதே என்றும் தனக்கும் தனது குடும்பத்திற்கும் தேவையான உணவை மட்டும் உற்பத்தி செய்யாது ஒருவரின் திட்டமிட்ட உழைப்பால் ஒன்பது உயிர்கள் உண்டு சிறக்கும் அளவுக்கு தனது உணவு உற்பத்தி புரட்சிகரமானமுன்னேற்றத்தைக் காணவேண்டுமெனக் கூறி தனது உரையை முடித்தார்கள். திருவள்ளுவர் த.பள்ளியின் இயக்குனர்களில் ஒருவரான திரு.தேவதாசு அவர்கள் தனது உரையில் பன்னெடுங்காலமாகத் தோன்றிய பல பழமையான அமைப்புக்கள் இருந்தும் ஏறத்தாழ 15000 தமிழர்கள் வாழும் லண்டனில் உண்மையில் தாய்மொழிப் பற்று நிறைந்தவர்களாக அனைவரும் இருப்பார்களானால் நிச்சயம் சில ஊர்களுக்கு ஒரு பள்ளி வீதம் இன்று ஏறத்தாழ 10முதல் 15 பள்ளிகளாவது உருவாகியிருக்கும். ஆனால் கண்ணுக்கொப்பான பள்ளியை உருவாக்கி, ஒளிக்கொப்பான கல்வியைப் பெற பள்ளி துவக்கப்பட்டும் இன்றும் தங்களது குழந்தைகளை பள்ளிக்கனுப்பாது கருத்துக் குருடர்களாக இருக்கும் பெற்றோர்கள் தொடர்ந்து செயலற்றிருக்காமல் தங்கள் குழந்தைகளுக்குத் தாய்மொழிக் கல்வியை ஊட்டத்தக்க ஆவன பணியில் அனைவரும் ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அடுத்துக் கவிஞர் தமிழ்த்திரு ஞானசூரியன் அவர்கள் உரையில் அறுவடை உணவு உற்பத்திக்கு மிக இன்றியமையாதது சூரியன். சூரியக் கதிரொளியின் தன்மையால் மட்டுமே மரம் செடி கொடி தாவரங்கள் வளர்ந்தோங்கவும், நமது வயிற்றுப்பசிப் பிணியைப் போக்கிடத்தக்க உணவுகளைப்பெறமுடியும். அவ்வாறுபெற்ற உணவை உடனடியாக உண்பதில் கவனம் செலுத்தாமல் உணவு உற்பத்திக்குக் காரணமாக இருந்த எல்லாவற்றிற்கும் நன்றி கூறிய பின்னரே அதுவும் விழா கோலமாக புத்தாண்டுப் பொங்கலாக திருவள்ளுவர் ஆண்டை முன்னிறுத்தி செயல்படும் முறையை தமிழன் மேற்கொண்டதும் இன்று அதன் வளர்ச்சிக்கு எவ்வாறெல்லாம் பாடுபடாலமென எண்ணிமகிழ்வதோடு எதிர்கால நமது சந்ததிகளின் நலனுக்கு ஆக்ககரமாக எல்லாத் தமிழர்களும் செயற்பட்டுச் சிறக்கவேண்டும் என்றார்.

அடுத்து திரு.குமரகுரு (சட்டத்தரணி இலங்கை)அவர்களின் உரையில் பன்னெடுங்காலந்தொட்டு உலகமக்கள் பொங்கல்விழா எடுத்துக்கொண்டாடி பூரித்து மகிழ்கின்றனர். இராவணனூர் பொன்மண்ணில் பண்டைக்காலத்தில் கொண்டாடிய முறைகளையும் தற்கால சூழலுக்கேற்ப நாம் யார் எவ்வாறு மீள்வோம் என்பனவற்றை சிந்திக்கத்துவங்கிய விந்தையை அழகுற எடுத்துச்சொல்லித் தன் புரட்சியுரையை முடித்தார். அடுத்து உலகத்தமிழ் இளைஞர் பேரவைத் தலைவரும், இளவல் அண்ணலுமான டாக்டர்.சனர்த்தனம் அவர்களின் உரையில் உலகில் பல்வேறு நாடுகளில் வாழுகின்ற தமிழர்களெல்லாம் பூரித்து மகிழும் இவ்வேளையில் லண்டன் மாநகரில் பொங்கல் பொங்கி திருநாளாகிக்கொண்டிருப்பதைக் காண்கின்ற இவ்வேளையில் இலட்சக்கணக்கான கோடிக்கணக்கான காசு தமிழர்களின் நல்வாழ்வை எதிர்கால சமுதாயத்தின் எதிர்காலம் சிறப்புற அமைந்திடவேண்டி தன்வாழ்வையே பயணம்வைத்து தமிழகச்சிறையிலும், ஈழத்தமிழகத்தின் சிறையிலும் பொங்கிய உள்ளத்தோடு குமுறிக்கொண்டிருக்கும் அஞ்சாநெஞ்சம் கொண்ட வீரத்தமிழ் மணிகளை நினைவுகூர்ந்து அதுபோன்ற போராட்டங்களில் நாம் ஒருமித்த கருத்துடன் செயல்படப்போகும் காலம் வெகுதூரத்தில் இல்லை என வீரஉரை நிகழ்த்தினர். பரிசு விளையாட்டுப்போட்டிகளில் வெற்றிபெற்ற வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும், கலையரசி திருமதி டாக்டர் லலிதா சனர்த்தனம் அவர்கள் பரிசுகளை வழங்கினர். திருமிகு குமாரசாமி அவர்களின் பெருமுயற்சியில் நிகழ்வுற்ற விளையாட்டுப்போட்டிக்கான பரிசுகளை ஆர்வமுடன் பல தமிழ் நெஞ்சங்கள் முன்வந்து வழங்கினர். இறுதியாக முத்தமிழ்க் கலைமன்றத்தினரின் நடன விருந்துடனும், நகைச்சுவைத் திரைப்படத்துடனும் (திருமிகு.சுந்தரம் அவர்களின்) விழா இனிதே அனைவருக்கும் நன்றிகூறி சுமார் 10.30 அளவில் முடிவுற்றது.

---

**LONDON MURASU, 8 ASHEN GROVE, LONDON SW19 8BN**

**அன்பளிப்புச் சந்தா கட்டிவிட்டீர்களா?**

உங்கள் உறவினர்கள்/நண்பர்கள் இவர்களுக்கு
பரிசாக ஒரு ஆண்டுச் சந்தா கட்டுங்கள்!

ஐரோப்பிய நாடுகள்: £3-60/F.FR 35
வெளி நாடுகள்: £5-40/F.FR 45/US $10

## பாரிசில் மாபெரும் பொங்கல் விழா

ஜனவரித் திங்கள் வல்லி இன்னிசைக் குழுவினரால் பாரிசில் என்றுமே கண்டிராத அளவில் பொங்கல்விழா சிறப்புடன் கொண்டாடப்பட்டது. விழா 'பத்தோ' வின் தியேட்டர் டேறா தெ கென்னில் நடைபெற்றது. விழாவினை நடத்திய திரு. வல்லி அவர்கள் பாரிஸ் இந்தியத்தூதுவரை மக்களுக்கு அறிமுகப்படுத்தியதோடு விழா தொடங்கிற்று. தலைமை தாங்கிய திரு. இளங்கோ அவர்கள் அனைவரையும் வரவேற்று ஆண்டுதோறும் இதுபோன்ற தமிழ் விழாக்களை பாரிஸ் வாழ் தமிழ்மக்கள் தொடர்ந்து கொண்டாட வேண்டுமென வேண்டிக்கொண்டார்.

பொங்கல் விழாவினைப்பற்றி சிறப்புச் சொற்பொழிவினைப் பாரிசு தமிழ்த்தொண்டன் நிகழ்த்தினர். தன் பேச்சில் திரு. தமிழ்த்தொண்டன் அவர்கள் பொங்கல்விழா மதச்சார்போ, சமயத்தொடர்போ இன்றி உலகமக்கள் அனைவரும் கொண்டாடும் பொதுவிழா பொங்கல்விழா எனக்குறிப்பிட்டு தமிழ்இலக்கிய ஏடுகளிலிருந்து பல சான்றுகளையும் விளக்கிக் காட்டினர். பின்னர் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. கலைநிகழ்ச்சியில் வல்லி கலைக்குழு பல தமிழ்ப்பாடல்களை மக்களுக்கு அளித்தது. தொடர்ந்து செல்விகள் ஜெயந்தி வசந்தி அவர்களின் பரதநாட்டிய நடனமும், கதகளி நடனமும் நடைபெற்றது வயதில் இளயவர்கள் இவர்கள் என்றாலும் கலையில் முதியவர்கள் என்பதை தங்களின் நடனத் திறமையால் மக்களுக்கு எடுத்துக்காட்டினர். (இவ்விளஞ் சகோதரிகள் ஐரோப்பியநாடுகளில் பல இடங்களில் தங்கள் நடன நிகழ்ச்சிகளை நடத்த இருக்கின்றனர்).

தமிழ்நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண நிதியாக 3611 பிரெஞ்சு பிராங்குகளைக் கொண்ட பணமுடிப்புப் பையை திரு. வல்லி அவர்கள் இந்தியத் தூதுவரிடம் வழங்கினர். மேலும் 75தமிழ்ப் பாடல்கள் இயற்றிய திரு. லூர்வரதன் அவர்களுக்கு ஒரு தங்கக்காசு பரிசாக வழங்கப்பட்டது. முடிவில் சிவாஜிகணேசன்—கே.ஆர் விஜயா நடித்த கிரகப் பிரவேசம் திரைப்படம் காட்டப்பட்டது.

## ஐ.நா.சபைக்கு லண்டன் ஈழத்தமிழர் கழகம் கடிதம்

"உங்கள் நாட்டுப் பிரதமருக்கு ஈடில்லாப் பெருமையும், மதிப்பும் உலக அரங்கில் கிடைத்துள்ளதையிட்டு வெளிநாடுகளில் வாழும் கைப்பற்றப்பட்ட ஈழத்தைச் சேர்ந்த தமிழர்களாகிய நாம் அவருக்குப் பாராட்டுத் தெரிவிக்கின்றோம். ஈழத் தமிழர் மீது உங்கள்நாடு செலுத்திவரும் ஆதிக்கத்தையும், அதிகாரத்தையும் அமைதியானமுறையில் கைவிடுமென்றும் நிராயுதபாணிகளான ஈழநாட்டுத்தமிழர்களையும் முஸ்லிம்களையும் தொடர்ந்தும் படுகொலை செய்யாத முறையில், தமிழ் ஈழப் பிரதேசங்களிலிருந்து சிங்கள ஆயுதப்படைகள் வாபஸ்பெறப்படும் என்றும் எதிர்பார்க்கிறோம்."

"மலையகத்தின் பட்டாளிமக்களான தோட்டத் தொழிலாளிகளிடம் இருந்து நீங்கள் பறித்த குடியுரிமையையும் திரும்பவும் அவர்களுக்குக் கொடுக்க நமது ஈழத்தை நம்மிடம் தாருங்கள்." இவ்வாறாக லண்டனின் ஈழத்தமிழர் கழகத்தினர் நியூயார்க்கில் உள்ள இலங்கையின் ஐக்கியநாடுகள் பிரதிநிதியும் அந்தச்சபையின் தலைவருமாகிய திரு. வேஷர்லி அமரசிங்காவுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. இந்தக்கடிதம் 21.1.77ல் அனுப்பப்பட்டது.


Tamil Film Society of Great Britain

அளிக்கும்

அபூர்வ ராகங்கள் 35MM

ABC HAMMERSMITH, QUEEN CAROLINE ST, LONDON W6.
SUNDAY 12.45 PM 13TH MARCH 1977

3rd SCREENING ~ OWING TO POPULAR REQUEST!



கமலஹாசன் ~ ஸ்ரீவித்யா
சுந்தரராஜன் ~ நாகேஷ்
ஜெயசுதா

P. SRINIVASAN
01-679 1952/3
(DAY)
01-684 3095
S. SIVALINGAM
01-579 1783



# திரைக்கு வந்தவை — ஜனவரி வெளியீடு

தொகுப்பு : எஸ். எஸ். மணி.

## அவன் ஒரு சரித்திரம்



கோமதி சங்கர் பிக்சர்சாரின் **வண்ணப்படமாக** அவன் ஒரு சரித்திரம் வந்துள்ளது. இப்படத்தில் சிவாஜிகணேசன், ஸ்ரீகாந், சோ, வி.கே.ராமசாமி, மேஜர் சுந்தரராஜன், மஞ்சுளா, காஞ்சனு, மனோரமா, பண்டரிபாய், ரி.கே.பகவதி என்ருெரு நட்சத்திரக்கூட்டமே நடித்துள்ளது. கதை: செல்வபாரதி, வசனம்: ஆரூர்தாஸ், பாடல்கள்: கண்ணதாசன். இசை: எம்.எஸ்.விஸ்வநாதன். டைரக்‌ஷன்: கே. எஸ்.பிரகாஷ்ராவ்.

### விமர்சனம்

நாட்டுக்கு நல்லதுசெய்ய நினைக்கும் ஒரு ஐ.ஏ.எஸ் அதிகாரியின் வாழ்க்கையில் இன்றைய அரசியல்வாதிகள் எப்படியெல்லாம் குறுக்கிடுகிருர்கள் என்பதையும், அதனை அவர் எப்படி எதிர்த்து வெற்றிபெறுகிருர் என்பதையும் "அவன் ஒருசரித்திரம்" காட்டுகிறது. அத்துடன் பாரதப் பிரதமரின் 20அம்சத் திட்டமும் இப்படத்தில் பொருத்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. நடிகர் திலகம் ஒரு ஐ.ஏ.எஸ் அதிகாரியாகவே வாழ்ந்து காட்டுகிருர். பொதுத்தொண்டிற்கும், குடும்பவாழ்க்கைக்கும் இடையே அகப்பட்டு அவர் திண்டாடும் காட்சிகளில் ஜொலிக்கிருர். கதாநாயகி மஞ்சுளாதான் என்றலும் நமது நினைவில் நிற்பவர் காஞ்சனுதான். பாடல்களில் "வணக்கம் பலமுறைசொன்னேன்" பலமுறை விரும்பிக்கேட்கும் பாடலாக அமைந்துள்ளது. "நாளை என்ன நாளை" என்னும் பிரசார பாடலும் கேட்கும்படியாக உள்ளது. படத்தைச் சரளமாக டைரக்ட்செய்துள்ளார் கே.எஸ்.பிரகாஷ்ராவ். நகைச்சுவையில் விரசம் தட்டுவதை இவர் தவிர்த்திருக்கலாம். மொத்தத்தில் தமிழகத்தின் இன்றைய அரசியல் சூழ்நிலைக்கு ஒரு ஏற்றபடமாக "அவன் ஒரு சரித்திரம்" அமைந்துள்ளது.



## ← அன்று சிந்திய ரத்தம்

பொங்கலுக்குத் திரைக்குவந்த மற்ருெரு வண்ணப்படம் அன்றுசிந்திய இரத்தம். கீத் சித்ராவின் தயாரிப்பான இப்படத்தில் ஜெய்சங்கர், பத்மப்பிரியா ஜோடியுடன், தேங்காய், அசோகன், மனோரமா, போன்ருேர் நடித்துள்ளனர். கதைவசனம்: ரி.என்.பாலு. இசை: குமார். டைரக்‌ஷன்: ரி.. ஆர்.சுந்தரம்.

## புண்ணியம் செய்தவள் →



ரவிகம்பைன்ஸின் படமாக புண்ணியம்செய்தவள் திரையிட்டுள்ளார்கள். முத்துராமன் ஸ்ரீப்ரியா, விஜயகுமார் படாபட் ஜெயலட்சுமி ஆகியோர் நடித்துள்ளார்கள். கதை ஜீ.பாலசுப்பிரமணியம், திரைக்கதை வசனம் டைரக்‌ஷனை கே.எஸ் கோபாலகிருஷ்ணன் கவனித்துள்ளார். வாலியின் பாடல்களுக்கு எம்.எஸ்.விஸ்வநாதன் இசைஅமைத்துள்ளார்.

## சிறப்புநாட் குறிப்பு

| மாதம் | நாள் | சிறப்பு | விடுமுறை |
|---|---|---|---|
| மார்ச்சு | 3 | மீலாடி நபி | பலநாடுகள் |
| மார்ச்சு | 4 | மாசிமகம் | — |
| மார்ச்சு | 5 | பௌர்ணமிவிடுமுறை | இலங்கை |
| மார்ச்சு | 20 | யுகாதி தெலுங்கு புதுவருடம் | — |
| மார்ச்சு | 29 | ராமநவமி | — |
| ஏப்ரல் | 3 | பங்குனிஉத்திரம்/பௌர்ணமி விடுமுறை | இலங்கை |
| ஏப்ரல் | 8 | பெரியவெள்ளி | பலநாடுகள் |
| ஏப்ரல் | 10 | ஈஸ்டர் ஞாயிறு | — |
| ஏப்ரல் | 11 | ஈஸ்டர்திங்கள் | பலநாடுகள் |
| ஏப்ரல் | 12 | தமிழ்ப்புதுவருடத்திற்கு முந்தியநாள் | இலங்கை |
| ஏப்ரல் | 13 | தமிழ்ப்புத்தாண்டு | தமிழகம், இலங்கை |



## ← உயர்ந்தவர்கள்

ராசலீலா பிக்சர்சாரின் படம் உயர்ந்தவர்கள். இப்படத்தில் கமலகாசன்- சுஜாதா ஜோடி ஜமையாக நடித்திருப்பதுடன், ஸ்ரீகாந், தேங்காய், சுருளிராஜன் பண்டரிபாய் மஞ்சபார்கவி ஆகியோர் நடித்துள்ளார்கள். திரைக்கதை வசனம் டைரக்ஷன்: ரி.என்.பாலு. பாடல்களை கண்ணதாசன் பாடியுள்ளார். இசை சங்கர் கணேஷ். இப்படத்தில் பால முரளிகிருஷ்ண பாடி நடித்தும் உள்ளார்.

## என்ன தவம் செய்தேன் ↓



முத்துராமன், சுஜாதா, விஜயகுமார், பவானி, மனோரமா எஸ். வி.சுப்பையா நடித்துள்ள என்னதவம் செய்தேன் படத்தை நலந்தா மூவிஸ் தயாரித்துள்ளது. கதை: ஆர்.கே.தர்மராஜ். வசனம்: ஆரூர் தாஸ். பாடல்கள்: கண்ணதாசன். இசை: எம்.எஸ். விஸ்வநாதன் டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு.

பொங்கல் விருந்தாக ஐந்து படங்கள் வந்துள்ளன. இதில் எது வெற்றிப்படம்? பொறுத்திருந்து பார்ப்போம். ஓடி முடியட்டும்.






இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சி நடந்து வந்த நாட்களிலே ஒருநாள் இனம்தெரியாத ஒருவன் ஒரு ஆங்கிலேயத் துரைவரைக்கொலைசெய்து விட்டான், இதையறிந்து கோபம் கொண்ட ஆங்கிலேயர் பலர்கூடி இலங்கை வந்து சேர்ந்தனர். இதற்கான வழக்கையும் கொழும்பிலேயே விசாரணை செய்வதாக முடிவுகட்டினர். இக் கொலையை ஒருவரும் நேரில் காணுதபடியால் ஆங்கிலேயருக்கு யாரைக் குற்றம் சாட்டுவது என்று தெரியாது விழித்தனர். இருந்தும் வழக்கை விசாரணைசெய்ய வேண்டுமென்ற நோக்கிலோ அங்குவேலை செய்து வந்தவரும், கடவுள் பக்தனுமாகிய "பொன்னையா" என்பவன் சிலசமயம் இக்கொலையைக் கண்டிருக்கக்கூடும் என்று முடிவுகட்டி, அவனையே முதலாவது சாட்சியாகவும் நியமித்தனர். இதைக்கேள்வியுற்ற "பொன்னையா" கடவுள் வழிபாட்டைவிட வேறு என்ன செய்யமுடியும்? பாவம்.

வழக்கு விசாரணை நாளும் நெருங்கியது. ஆங்கிலேயரின் வழக்கல்லவா? பார்ப்பதற்குப் பல இடங்களில் இருந்தும் மக்கள் கொழும்பை வந்து அடைந்தனர். ஆங்கிலேயர் பொதுவாக ("FIRST NAME & SURNAME") இரு பெயரையே சொல்லி ஒருவனை அழைப்பது தெரிந்த விடயமாயிற்றே. அதேபோல் சாட்சியின் முழுப்பெயரும் 'கந்தையா பொன்னையா' என்று அறிந்துகொண்டனர். விசாரணை நேரம் நெருங்கவே கந்தையா - பொன்னையா சாட்சிக்கூட்டில் நிறுத்தப்பட்டார். நடுநடுங்கிக் கொண்டிருந்த பொன்னையாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. முழித்துக் கொண்டிருந்தார் பாவம், வேறு என்னதான் செய்யமுடியும்?

வெள்ளைக்கார நீதிபதியும் வந்து அவரது ஆசனத்தில் அமர்ந்துகொண்டார். அமர்ந்தவர் திரண்டு வந்திருந்த சபையோரைப் பார்த்து "SILANCE PLEASE" என்று மேசைமீது தட்டினர். உடனே சபை அமைதியாக இருந்தது. சாட்சிக் கூண்டில் இருந்த சாட்சியைப் பார்த்தவாறு, தனது கையில் இருந்த ஒரு பத்திரிகையில் இருந்த அச்சாட்சியின் பெயரை ஒருவாறு வாசிக்க முயன்று அரை குறையில்,

"ARE YOU MR KANDAIAH- PONNAIAH?" என்று வினவினர். ஆங்கிலேய நீதிபதியின் உச்சரிப்பு ஏதோ "கண்டாயா, போனயா" என்றவாறு இருந்ததாலோ என்னவோ கண்கலங்கிய நிலையில் சாட்சி —

"நான் காணவும் இல்லைத்துரை, போகவும் இல்லைத்துரை" என்று பதில் கூறியது.

— யோகி - வெம்பிளி. (லண்டன்)



# திருக்குறள்-THE GREAT KURAL

In the Bhagavad Gita , acclaimed as the "Song celestial", it is reiterated by Sri Krishna that Karma-Yoga is the yoga of selfless action. Here every type of work is glorified as prayer, worship and ritual. There is no high and low in work. Each and every task is for the glory of man and God . Even the good Lord himself worked looking after the horses, feeding them and brushing them up at the end of each days' battle during the Kurushetra episode in the great epic. Thus work gets the stamp of spirituality and individual action is the keynote of life and spring board for individual and national progress.

In our collective life, there cannot be any divorce between true religion and genuine politics. Religion understood in its wider implication is not a set of dogmas or practices but a continual inspiration to take man to a higher ethical life. The great Valluvar knows that ethical life cannot survive on empty stomachs. Hence his concern for relentless action, sustained by a determination even to challenge an adverse destiny."Guided by lasting and simple moral values we have emerged idealists without illusions, realists who still know the old dreams of justice and liberty . We shall devote every effort of body, mind and spirit to lead our nation back to greatness" . These resounding words of John F Kennedy are surely echoes of Valluvar's exhortation to his Tamil people. Even after 2000 years can the Tamil Nation take heed that action in all its manifestations is the keynote of national regeneration.

## 60. D I L I G E N C E (=ŪUKKAMUDAMAI)

ஊ க் க மு டை மை

ஆக்கம் அதர்வினாய் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையா னுழை.

Transl: Lofty ideals to no purpose seldom wealth grow
Diligence the price that tilts the luck of draw

Expl : Here Valluvar is not by any means, encouraging black-marketeers For him, diligence springs from the bedrock of Aram. Ends and means are equally vital to his teaching.

## 61. AGAINST LAZINESS (= MADI INMAI)

ம டி யி ன் மை

படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பயன் எய்தல் அரிது.

Transl: Even the riches and lands of Kingdom's reign
Laziness brings no fame thence to rack and ruin

Expl : Valluvar here exemplifies the simple input-output theory. He has no patience with the lazy man who neither earns nor even controls the outflow. Only a miracle can save him.

## 63. UNCEASING ACTIVITY (=ĀRL VINAI UDAIMAI)

ஆ ள் வி னை யு டை மை

பொறியின்மை யார்க்கும் பழியன்றி அறிவறிந்து
ஆள்வினை யின்மை பழி

Transl: No destinys' hand to brighten life no harm
No excuse, greater effort wealths' welcome warm.

Expl : The Teacher knows his pupil and his excuses only too well. Fate is our standard defence. But, by implication, Valluvar appeals **to our** sense of judgement: True you are not lucky but no harm; only action can redeem you now and ensure perhaps a lucky break later.

- K GNANASURYAN.

# சிறுமுகிற் கூட்டங்கள்

## (2.) ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

**அன்று** லோருவுக்கு மூன்று மணியிலிருந்து ஏழுமணி வரைதான் ஓய்வு. ஆனால் லோரு செந்திலைச்சந்தித்து பின் பிம்லிக்கோ வரையும் நடந்துவர ஏழுமணிக்குமேல் ஆகிவிட்டது. பிலைப்பி தொம்ஸனின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. "லோரு அந்த வீட்டில் பிள்ளை பார்க்கும் ஆயா". குழந்தையைக் குளிப்பாட்டி ஏழரைமணிக்கு படுக்கையில் போட்டிருக்க வேண்டும். இப்போதோ நேரம் ஏழரைக்குமேல். பிலைப்பி எரிந்து விழுவதைக் கவனிக்காமல் குழந்தையை எடுத்துக்கொண்டு போனாள் கழுவ.

"நான் ஏன் லேட் என்று கேட்கிறேன். பதில்சொல்லாமல் போகிறாய்!, இனி என்ன நான் நாலு கிழமைகள் தானே இருக்கப்போகிறேன் என்ற மண்டைக்கனமா? நான் விரும்பியிருந்தால் ஒருகிழமை நோட்டீசில் உம்மைக் கலைத்திருக்கலாம். பாவம் சின்னப்பெட்டையாய்க் கிடக்கே என்று பார்த்து ஒருமாதம் தந்தால் நீ நினைத்தபடி நடக்கிறாய் நினைத்தபடிசெய்கிறாய்" பிலைப்பி இரைந்தாள்.

ஒருமாத நோட்டீஸ் ஏதோ தன்னில் பரிதாபப்பட்டுத் தரவில்லையென்று தெரியும் அவளுக்கு. அவள்கணவன் டேவிட் தொம்சன் கொம்பனி விஷயமாக உலகப் பிரயாணம் ஒன்றை நடத்துகிறான் அவன் வரக்கிட்டத்தட்ட ஒருமாதம் ஆகும்.

அதற்கிடையில் பிலைப்பிக்கு யாரையும் வேலைக்கு எடுக்க விருப்பமில்லை. டேவிட்டுக்குப் பிடிக்காதயாரையும் எடுத்துவிட்டால் அவன் பிலைப்பியைப் பேசுவான். அதற்காகத்தான் லோருவைக் கலைக்காமல் வைத்திருக்கிறாள் பிலைப்பி என்று லோருவுக்குத் தெரியும். ஆனால் அவள் ஒன்றும் பதில் பேசாமல் குழந்தையைப் படுக்கைக்குக் கொண்டு போனாள். குழந்தையைப் படுக்கையில் நித்திரையாக்கிவிட்டு வெளியில் வரும்போது பிலைப்பி சிற்றிங்ரூமில் இருந்தாள். "ஏன் லேட்! எங்கே போய் இருந்தாய். மைராவும் லண்டனில் இல்லையே யாருடன் திரிந்தாய்" பிலைப்பிகேட்டாள். லோருவுக்கு எரிச்சல் வந்தது.

"உங்களைப் போன்றவர்களின் முகத்தில் விழிக்காத ஒரு இடத்துக்குப் போக யோசித்தேன். ஆனால் இரக்கமனமுள்ள ஒருவர் காப்பாற்றிவிட்டார்" என்று கத்த நினைத்தாள். ஆனால் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு "ஏதாவது அறை கிடைக்குமா என்று பார்க்கப் போனேன். கிங்ஸ் ரோட்டுக்கு வரும்போது பஸ்கிடைக்காமல் நடந்து வந்தேன்"! பிலைப்பி லோருவை நம்பினாள். பிலைப்பிக்குத் தெரியும் லோரு மைராவைப்போல் வாயாடியல்ல. அத்துடன் ஒரு பெடியன் சினேகிதமும் இல்லை என்றும் தெரியும்.

"ஐயம் சொறி போர் த லேட்" என்றாள் லோரு. பிலைப்பியின் மறுபேச்சுக்குக் காத்திராமல் குசினிக்குப்போனாள். குசினியில் வேலைகளில் உதவி செய்வதும் அவளது வேலைகளில் ஒன்று. வீட்டில் டேவிட் தொம்சன் இல்லாதபடியால் பெரிய ஆரவாரச் சமையல் ஒன்றும் இல்லை. லோரு சாப்பிட்டு முடிய பீட்டர்க் கிழவன் எல்லாம் கழுவி முடித்துவிட்டான். லோரு வேலை செய்யும் மனநிலையிலும் இல்லை. தன்னை வேலைசெய்ய விடாமல் தானே எல்லாம் செய்து முடித்துவிட்ட பீட்டர்க் கிழவனைப்பார்க்க நன்றி பெருகியது "தாங்ஸ்" என்றாள். கிழவன் பாசத்துடன் தலையைத் தடவிவிட்டான். இந்தப்பாசம் இல்லாதிருந்தால் எப்போதோ இந்த வீட்டைவிட்டு ஓடியிருப்பாள். அவளுக்கு என்று யார் இருக்கிறார்கள் லண்டனில்? மைராவும் பெல்வாங்ட்டுக்குப் போய்விட்டாள் போனகிழமை. இனி அவள் தனி மனிசியில்லை லோருவுடன் திரிய. லோருவுக்கு உதவி செய்ய. மைரா லோரு வரமுதல் பிலைப்பிவீட்டில் உதவி செய்த சுவிடிஸ்பெண். லோரு வந்து கொஞ்ச நாட்களில் வேறு வேலை பார்த்துக்கொண்டு போய்விட்டாள். போன இடத்தில் ஐலண்டைச்சேர்ந்த டானியலைச்சந்தித்தாள்.

மைராவும் டானியலும் கல்யாணம் செய்வதற்காக பெல்வாங்ட் போய்விட்டார்கள். மைரா சிலவேளை லண்டனில் இருந்திருந்தால் இன்று இப்படி முடிவுகட்டியிருப்பாளா? மைராவை விட்டால் யாரிடம் போவது? தேனை நாடிவரும் ஈக்கள்போல் ஆயிரக்கணக்கான பெண்கள் லண்டனுக்கு வந்து வாழ வழியில்லாமல் லண்டன்தெருக்களில் விலைமாதர்களாகத் திரிகின்றார்கள் என்பது லோருவுக்குத் தெரியாததல்ல. பதினேழு வயதுவரை அவள்பட்ட பாடு போதும் என்று வந்துவிட்டது லோருவுக்கு நேற்று நடந்த விஷயத்தை நினைக்கபோது!

நேற்று பிலைப்பி வீட்டில் இருக்கவில்லை. கணவன் வீட்டில் இல்லாத நேரத்தில் பிலைப்பி வீட்டில் இருப்பதே குறைவு. நேற்று வரவேண்டியவன் ஜேர்மனியில் இருந்து போன் பண்ணிச் சொன்னான் தான் வரவில்லையென்று, இரண்டு நாளைக்கு முன். எனவே குழந்தை ஜெரமியை லோருவின் பொறுப்பில் விட்டுவிட்டு பிலைப்பி ரீஜன்ட்ஸ்ரீட்டுக்குப் போய்விட்டாள் சாமான்கள் வாங்க. சமயல்கார கிழவன் பீட்டர் பின்னேரம் ஓய்வு எடுத்துக்கொண்டு வெளியே போய்விட்டான். லோருவும் குழந்தையும் கோர்ட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

வெளியில் கார்ச் சத்தம் கேட்டது. டேவிட்தொம்சன் வந்துகொண்டிருந்தான். அவனைத் தனிமையில் சந்திக்க லோருவுக்குப்பயம். முன் இரண்டொருதடவை அவன் அவளிடம் நடந்துகொண்ட விதம் அவளை அவனிடம் பயப்பிடப் பண்ணியிருந்தது. எதிர்பாராத விதமாக அவன் வந்ததால் தனக்கு வந்த வியப்பைக் காட்டிக் கொள்ளாமல் குழந்தையுடன் விளையாடிக்கொண்டிருந்தாள் லோரு. ஜெரமி தகப்பனைக் கண்டதும் பாய்ந்துகொண்டு தகப்பனிடம் போய்விட்டான்.

"எங்கே பிலைப்பி" என்று கேட்டான் டேவிட் சிற்றிங்ரூமில் நுழைந்தபடி. "கடைக்குப்போய் விட்டார்கள்" என்றாள லோரு. "அவளுக்குத் தெரியாது நான் இன்றைக்கு வருவேன் என்று. பிஸினஸ் மீட்டிங் கான்சல் பண்ணியபடியால் வரவேண்டி வந்துவிட்டது" என்றான். "பீட்டர் எங்கே" என்றான் குசினிப் பக்கத்தில் பார்வையை ஓட்டியபடி. "அரைநேர ஓய்வு. வெளியில் போய்விட்டார்" என்றாள் லோரு. தான் தனிமையில் இருக்கிறேன் அவனுடன் என்ற உணர்ச்சியே அவளை என்னவோ செய்தது.

"ஓ! நீர் மட்டும் தான் வீட்டில்"

அவன் சிரிப்பு அவளுக்கு எரிச்சல் வந்தது. "லோரு

கொஞ்சம் டீ போடமுடியுமா" என்றான். வெளியில் வெய்யில் கொழுத்திக்கொண்டிருந்தது. அவன் சேர்ட்டே வியர்வையில் நனைந்து உடம்போடு ஒட்டிக்கிடந்தது. இந்த அவியலில் என்ன தேனீர்? அவள் மறுமொழி சொல்லாமல் குசினிக்குள் போய்த் தேனீர் போட்டுக்கொண்டு வரும்போது அவன் தன் அறையில் விசில் அடிப்பது கேட்டது.


"லோறு மேலகொண்டு வாரும்" என்றான் டேவிட். எரிச்சலுடனும், ஆத்திரத்துடனும் ஒவ்வொரு படியாக மேலே ஏறினாள். அவன் கதவு ஆவென்று திறந்துகிடந்தது. பீலைப்பியினதும் டேவிட்டினதும் படுக்கையறையது. லோறு ஒருநாளும் மேலே போய் இல்லை அந்த அறைக்கு. அறையில் உள்ளிட்டதும் மூக்கில் அடித்தது சுகந்தமணம். விலையுயர்ந்த தளபாடங்கள், அலங்காரமேசை, வண்ண வண்ணமான வாசனைத் திரவியங்கள், மேக்கப் சாதனங்கள் மேசையில் பரப்பிக் கிடந்தன. டேவிட் கட்டிலில் சேர்ட் இல்லாமல் உட்கார்ந்து தன்பெட்டியில் ஏதோ தேடிக்கொண்டிருந்தான். அலங்கார மேசையில் ஒரு மூலையில் தேனீர்க்கோப்பையை வைத்துவிட்டுத் திரும்பியவளுக்கு கதவையடைத்துக்கொண்டு நிற்கும் டேவிட்டைக் கண்டதும் 'ஓ' வென்று அலறவேண்டும்போல் இருந்தது.

அவன் கையில் பிரெஞ்நாட்டு லேபிள் போட்ட வாசனைப்பெட்டி இருந்தது. கண்களில் வெறிஇருந்தது, உடம்பில் சேர்ட் இல்லை. அவளைப்பார்த்து மெல்லமாகச்சிரித்தான். என்னசெய்வது இப்போது? எப்போது வருவாள் பீலைப்பி? லோறுவுக்குத் தெரியாது பீலைப்பி இருந்தாலும் டேவிட் பயப்படப்போவதில்லையென்று. அவள்தன் நடுங்கும் குரலை அவனுக்குக் காட்டாமல் "விடுங்கள் வழியை" என்றாள். "உமக்காக ஒரு பிரஞ் பேர்வியூம் வாங்கி வந்திருக்கிறேன் லோறு" அவன் குரல் குழைந்தது.

"எனக்குத் தேவையில்லை எதுவும்" அவள் குரல் வெடித்தது. அவனின் கரங்கள் அவள் தோளில் பதிந்தது. "லோறு உமக்கு வாழ்க்கையை அனுபவிக்கத் தெரியாது. நீர் மட்டும்தான் இந்தவீட்டில் வேலைக்கு வந்தாய் என்று நினைக்காதே". அவன் சொன்னான்.

"அதுதான் ஆறுமாதத்துக்குமேல் இல்லாமல் ஓடுகிறார்கள் உங்கள் அன்புக்குப் பயந்து" அவள் எரிந்து விழுந்தாள். "நானாக அனுப்பவில்லை அவர்களாகவும் போகவில்லை. பீலைப்பிக்கு எல்லோரிலும் சந்தேகம். ஒருதரம் அவளுக்கு பயித்தியமே பிடித்துவிட்டது".

"உம்மைப்போல் புருஷனோடு இருந்தால் பைத்தியம் பிடிக்காமல் என்னசெய்யும்" அவள் பார்வை ஜன்னலுக்குவெளியே பாய்ந்தது. ஜன்னல் கதவு திறந்திருந்தது. பக்கத்து வீட்டுக்காரர் புகழ்பெற்ற அரசியல்வாதி. அவர் மனைவி குழந்தைகளுடன் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தாள். "சத்தம்போட்டு உதவிகேட்டால் என்ன?" லோறு ஒருகணம் நினைத்தாள். டேவிட் நெருங்கி வந்தான்.



சேர்ட்போடாத பரந்த மார்பில் இருந்துவரும் வியர்வை
மணம் கூட லோறுவின் மூக்கில் பட்டது. "பயப்படாதே
பேபி" டேவிட் மெல்லக் குனிந்து அவள் கன்னங்களை முத்த
மிட்டான். அவள் சட்டென்று விலகிநின்றாள். கன்னம் எரிவது
போல் இருந்தது.

"லோறு நான் விரும்பினால் உலகத்தில் உள்ள அத்தனை சா
திப் பெண்களையும் விரும்பியவர்களை அனுபவிக்கலாம்.
எத்தனையோ சாதி, எத்தனையோ கலர், மொழி" வெறி
கொண்ட வேங்கைக்கு முன் நிற்பதுபோல் அவள் நின்
றாள். "பின் ஏன் என் பின்னால் வருகிறீர்" அவள் கண்ணீர்
கன்னங்களில் ஓடியது.

"புதுச்சட்டை வாங்கத்தான் பெண்கள் விரும்புவார்கள்,
புதுப்பெண்ணை அனுபவிக்கத்தான் ஆண்கள் விரும்பு
வார்கள்" அவன் இனி நெருங்க இடமில்லை என்னும் அள
வுக்கு அவள் அருகில் வந்துவிட்டான். உணர்ச்சி வெறியில்
அவன் கண்களில் உண்டாகும் வேட்கையை அவளால்உண
ரமுடிந்தது. அவன் கைகள் அவளது மார்புச் சட்டையில்
பதிந்தது அடுத்தகணம்.......

கொதி தேத்தண்ணீர் மார்பில் பட்ட கொடு
மையுடன் அவன் அலறினான். "அவனிடம் அகப்பட்ட தன் மேற்
சட்டையைப் பிய்த்துக்கொண்டு அவள் அரைகுறை உடுப்
புடன் எப்படிப் படியிறங்கினாள் என்று தெரியாது."

"யூ பிளடி பிச்" அவனின் அலறல் கேட்டது. எப்படி அவனிட
மிருந்து தப்பினாள் என்றுதெரியாது. தன் கதவை இறுக்கிப்
பூட்டிக்கொண்டாள். குழந்தை முன் ஹாலில் விளையாடிக்
கொண்டிருந்தது. ஜன்னல் கதவைத் திறந்துவைத்தாள்.
தற்செயலாக அவன்வந்து கதவைத் திறந்தால் வெளிக்
கிட்டு ஓட. கிழிந்த தன் உடை, அவன் நகம்பட்ட மார்பு
அவள் அழுதாள்.

அழுதாள். தேற்ற யாரும் இல்லை. அவள் அழுதாள்
யார் வந்தும் கதவைத்தட்டவில்லை. பின்னேரம் பினலப்பி
வரும் சத்தம் கேட்டது. குழந்தையைத் தனியாகக் கண்ட
தும் லோறுவின் பெயரைச்சொல்லி இரைந்தாள். டேவிட்
மேலேயிருந்து குரல் கொடுத்தான். என்ன சண்டை பிடிக்
கிறார்கள் என்றுகேட்கவில்லை. அவள் பெயர் அடிபட்டது.
இருவரும் கத்திக்கொண்டார்கள். அவளை வேலைக்க
னுப்பிய (AU PAIR AGENCY) ஏஜென்சிக்குப் போன்
பண்ணினார்கள். "நீங்கள் அனுப்பிய பெட்டைக்கு மூளை
சரியில்லை அவளை இனி வேலைக்கு வைத்துக்கொள்ளப்
போவதில்லை. நல்ல இடத்தில் வேலைக்குச் சிபாரிசு
செய்யப் போவதில்லை. லோறுவுக்கு மூளை சரியில்லை".
லோறு வழியும் கண்ணீருடன் கேட்டுக்கொண்டிருந்தாள்.

படுக்குமுதல் கதவைத்தட்டிக் "கெதியில் வீட்டை
விட்டு வெளிக்கிடலாம்" என்றாள் பினலப்பி. அடுத்தநாள்
காலை டேவிட் தன் 'பிசினஸ்' விஷயமாக கிட்டத்தட்ட
நாலுகிழமைகள் வெளிநாட்டில் இருக்கவேண்டி நேரிடும்
என பினலப்பியிடம் சொன்னான். அவன் போனபின் பினலப்பி
சொன்னாள். "நீ சின்னப் பெட்டையாக இருக்கிறாய். லண்
டனில் என்னவேலை கிடைக்கப் போகிறது? ஏதோ பாவத்
துக்குப் பயந்து ஒருமாதம் இருக்கவிடுகிறேன்" என்றாள்.

பாவத்துக்குப் பயந்து? யார் பாவத்துக்குப்
பயந்து? ஒருமாதம் முடிய எங்குபோவது? வீட்டுக்குத்திரும்
பிப்போவதா? தன் சிறிய தகப்பன் சிம்சன் எப்படிநடத்
துவான். லோறு சிம்சன்! அவள் பெயரே அவளுக்குச்
சிரிப்பாக இருந்தது. நான் ஏன் லோறு நியூட்டனாக இல்
லை? அவளின் தாய் மேரி லோறுவின் தகப்பனின் பெயர்
நியூட்டன் என்றுதான் சொன்னாள். என்ன ஒற்றுமை.

அவளைப் போலத்தான் அவள் தாய் மேரியும்
பதினெட்டு வருடங்களுக்குமுன் மேற்கிந்தியத் தீவொன்றில்
இருந்து லண்டனுக்கு வந்தாள் நேர்ஸிங்செய்ய. பிரிட்டிஸ்
ஏகாதிபத்தியம் மலிவுக்கூலிகளாக உலகமெங்கும்கொண்டு
போன இந்தியரில் தென்அமெரிக்காவில் பிரிட்டிஸ் கயானா
வில் நிலைபெற்றவர்கள் மேரியின் பெற்றோர்.

சாப்பாட்டுக்காகச் சமயம் மாறிப் பெரிய மனி
தரான இந்துக்களில் ஒருகுடும்பம். மேரியின் தகப்பன்
கடைவைத்திருந்தான். மகள் லண்டனுக்குப் படிக்கப்
போவதைத் தடுக்கவில்லை. பெருமையென்றே நினைத்தார்.
எங்கள் இலங்கையர்கள் நினைத்துத் தங்கள் பிள்ளைகளை
அனுப்பியதுபோல். லண்டனில் ஒரு ஆஸ்பத்திரியில் படிக்க
இடம்கிடைத்தது. படிப்புத்தொடங்க ஆறுமாதம் முந்தியே
மேரி லண்டனுக்கு வந்துவிட்டாள். அப்போதெல்லாம்
வருவது அவ்வளவு கஷ்டமாக இருக்கவில்லை.

வந்திருந்த ஹொஸ்டலில் அமெரிக்க மாணவனை
நியூட்டனைக்கண்டாள். லண்டன் ஒரு கந்தர்வ உலகம்,
கருத்தையும் கண்ணையும் மயக்கும் ஒருமாய நகரம்.
பிழைப்புக்கு வந்து தங்கள் வாழ்க்கையை அநியாயமாக்
கிக்கொண்ட ஆயிரக்கணக்கான வெளிநாட்டு இளைஞர்
களின் கதையை எத்தனையோ லண்டன் தெருக்கள்சொல்
லும். அழகும் இளமையும் மேரியின் எதிரிகள் என்பதை
அவள் உணர வெகுகாலம் எடுத்தது. 'ஆர்ட்' கொலிஜ் மா
ணவனை நியூட்டன் மேரியின் அழகில் மயங்கியது ஆச்சரி
யம் இல்லை.

லண்டனில் வசந்தகாலம் தேவலோகம் இப்படித்
தானோ என்பதுபோல அழகாக இருக்கும். பல்நிறஉடையில்
நடையில் வெளிநாட்டாரின் குவியல் லண்டன் தெருக்களில்
பெருக்கெடுக்கும்.

வசந்தம் முடிந்தது. பாதாள றெயில்களும், பண்
பான பூங்காக்களும் வசந்தகாலக் காதலர்களின் கதை
களை மறந்து தன்பாட்டில் இயங்கின. படிப்புத்தொடங்குவ
தற்கு ஒன்றிரண்டு மாதங்களே இருந்தன. தலைச் சுற்றும்
சத்தியும் ஏன் என்று மேரிக்கு விளங்கி ஆசைக்காதலன்
நியூட்டனுக்குச் சொன்னாள். எத்தனையோ விநோதமான
லண்டன் நகரம் நியூட்டன் இல்லாமல் வெறுமையாய்த்தெ
ரிந்தது மேரிக்கு. அமெரிக்கனின் 'பேபி' விளையாட்டு
முடிந்துவிட்டது. நியூட்டனைக்கண்டு இரண்டு மாதங்களாகி
விட்டன. இந்தப்பெரிய லண்டன் நகரில் எங்கேதேடுவாள்
அவனை. எங்கே போய்விட்டான். தலைசுற்றிக் கால் தடு
மாறி விழப்போனவளைக் காப்பாற்றினான் ஸிம்சன்.

நகரும்படிகள் கீழே போய்க்கொண்டிருந்தன.
மேரியின் தலைசுற்றிக்கொண்டுவந்தது. ஸிம்சன் அழகு
பிம்பமான மேரியைத் தாங்கிப் பிடித்துக்கொண்டிருந்
கொண்டிருந்தான். அன்றுமட்டுமல்ல! வாழ்க்கைஎல்லாம்.
தன் காதலன் விபத்தில் இறந்துவிட்டான் என்று ஸிம்சனுக்
குச் சொன்னாள் மேரி. ஸிம்சனின் பார்வை அவளின் ஊசிய
வயிற்றில் பதிந்திருந்தது. அவளிடம் பரிதாபமோ, காத
லோ என்னவோ ஸிம்சனுக்கு. இரண்டுபேரும் கல்யா
ணப்பதிவு செய்தார்கள்.

படிக்க வந்த பிள்ளை வயிற்றுடன் கல்யாணப்பதிவு செய்யும்போது லோரு மேரியின் வயிற்றில் உதைத்துக் கொண்டிருந்தாள்.

ஸிம்சன் மேரியில் அன்பில்லாமல் இல்லை. ஆனல் பொன் உடம்பும் நீலவிழிகளும் கார்குழலுமாக லோரு நாளொரு வண்ணமும் பொழுதொரு விதமுமாகவளர, முன்பின் தெரியாத அமெரிக்கனில் அவனுக்குப் பொருமை வந்தது.

அந்தப் பொருமை லோருவின் இளமையைக்கண்டவுடன் வேறுவிதத்தில் உருவெடுத்தது. லோருவுக்குத் தாய் சொல்லியிருந்தாள் ஸிம்சன் லோருவின் தகப்பன் இல்லை என்றும் அதுதான் மற்றத் தம்பி தங்கைகள் கறுப்பாகவும், சுருண்ட தலையுடனும் இருக்கிருர்கள், லோரு**வேறுவித**மாக இருக்கிறள் என்று. லோருவின் தகப்பன் விபத்தில் இறந்து விட்டான் என்று மேரி லோருவுக்குச் சொல்லும்போது, லோருவின் பிஞ்சுமனம் கம்பீரமானதா **தன்** தகப்பனின் என்று கேட்டாள். மேரி பதில்பேசவில்லை. லோரு வளர வளர ஸிம்சனின் பார்வையின் போக்கும் மாறியது. எலும்பைப் பார்த்து வாயிலில் ஒரு பட்டினி கிடக்கும் நாயின் பார்வை. லோரு இன்னும் சின்னப்பிள்ளை இல்லை. சாக்குப் போக்காக ஸிம்சன் லோருவை அணைப்பதிலும் இழுப்பதிலும் என்ன அர்த்தம் என்று லோருவுக்குத் தெரியாமலில்லை.

வீடு நரகமாக மாறியது. லோருவின் படிப்பு முடிந்தது. ஜமேக்காவில் மேற்படிப்புப் படிக்க லோரு மாட்டேன் என்ருள். தெரிந்த ஒரு ஆங்கிலக்குடும்பம் லண்டனுக்குவர ஆயத்தம் செய்துகொண்டிருந்தார்கள். லோரு தாயிடம் அழுது கூத்தடித்துத் தன்னை லண்டனுக்கு அனுப்பச் சொன்னுள். மேரிக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. தான் பட்டபாடு லண்டனில் அவள் மறக்கவில்லை. ஆனல் லோரு வீட்டில் இருந்து நடக்கப்போவது என்ன? ஸிம்சன் எத்தனையோ காரணம் காட்டித் தடுக்கப்பார்த்தான். கடைசியில் மேரி எத்தனையோ புத்திகள் சொல்லி மகளை லண்டனுக்கு அனுப்பினுள்.



தெரிந்த குடும்பம் லண்டனில் தங்கவில்லை. மான்செஸ்டர்க்காரர்கள் அவர்கள். லண்டனில் ஒரு ஏஜென்சி மூலம் லோருவுக்கு டேவிட் தொம்சன் வீட்டில் வேலைஎடுத்துக் கொடுத்துவிட்டனர். ஆங்கிலேயருடன் சீவிப்பது பலவிதத்தில் நல்லது. ஆங்கிலம் பழகலாம். அத்துடன் லோருவுக்கு இப்பொழுதுதான் பதினேழு வயது. நேர்ஸிங் செய்யமுடியாது. அதுவரைக்கும் ஒருவசதியான வீட்டில் சீவிப்பதே பெரியகாரியம் என்று பட்டது லோருவுக்கு. லோரு பீனலப்பி வீட்டுக்கு வந்தகாலத்தில் மைரா வேலையை விட்டுப் போகும் தறுவாயில் இருந்தாள்.

அவள் போகும்வரை லோருவுடன் அன்பாகப் பழகினுள். சுவீடன் நாட்டைச்சேர்ந்த மைரா லண்டனில் மூன்று நாலு வருடமாக இருக்கிறள். இப்போது ஐயர்லாந்து நாட்டைச்சேர்ந்த டானியலைக் கல்யாணம் செய்யும்நோக்கத்துடன் வேறுவேலை தேடிக்கொண்டிருந்தாள்.

லோரு டேவிட் கண்டபடி நடக்கவெளிக்கிட்ட ஆத்திரத்தில் நடந்துகொண்டவிதம் இனி ஒருமாதத்தில் எங்கே வேலை தேடுவது? என்ன வேலை தேடுவது? என்ற பிரச்சனைகளை யோசித்து யோசித்துக் கால்போனபோக்கில் நடந்தாள் அன்று. மைரா பெல்வாங்ட்டுக்குப்போய் இரண்டு மாதத்துக்கு மேலாகிறது. என்ன நடந்தது எப்போது வருவாள் என்று தெரியாது. வருவாளோ தெரியாது லண்டனுக்கு.

யாரும் இல்லை என்னவென்று கேட்க! வேதனையுடன் நடந்த லோரு ஏன் இருக்கவேண்டும் என்ற விரக்தியுடன் பாலத்தில் நடக்கும்போது அமைதியாகத் தவழும் ஆற்றைப் பார்த்துவிட்டு இதில் விழுந்து செத்துத் தொலைத்தால்என்ன என்று நினைத்தாள். செந்திலைக் காணவிட்டால் என்ன நடந்திருக்கும்?

(தொடரும்)

**TAMIL FILM & CULTURAL SOCIETY - LONDON**

PRESENT

Kumari MANJULA NARASIMHAN of Geneva

IN A

BHARATHA NATYA RECITAL

IN AID OF THE MURUGAN TEMPLE BUILDING FUND OF THE BRITTANIA HINDU TEMPLE TRUST

ON SATURDAY, 16TH APRIL 1977

AT 7.00 PM

AT KENNETH BLACK MEMORIAL HALL WORPLE ROAD, LONDON SW19

TICKETS : £2 ; £1.
01-946 3374; 01-639 9783
01-579 3029; 01-579 5720

# ANGLO ASIAN TRAVEL CLUB

34 GREENWAY, KENTON, MIDDLESEX.

FLY NOW!

FLY CHEAP!

For CHEAP FLIGHTS to the FAR EAST & the REST of the WORLD

CONTACT:

VICTOR KASINATHAN 01-204 1911
SESHI THIRUMALAI 01-800 9898
HARRY SEEVARATNAM 01-445 9101



COME TO

# Shree Krishna South India Restaurant



194 Tooting High Street, London, S.W.17
Telephone: 01-672 4250
(Prop: R. Ramanarayanan)
Masala Dosai—Uppuma—Iddly—Vadai—Dali Vadai—Adai—Avial—Sambar
Rasam—Puri—Chapathi—Paratha
Nearest Tube: Tooting Broadway & Colliers Wood
Catering for Weddings & Parties



# HABIB & COMPAGNIE

14 RUE CLAUZEL, PARIS 9e. Mº: ST. GEORGE
PHONES: BOUTIQUE: 5265245 & 2803356
M. MARICAR: 9366961

கும்பகோணம் TSR ஊறுகாய், அப்பளம்,
P.S. பாக்கெட் புளி, சென்னை கணேஷ்ராம்
777 ஊறுகாய், கறி, இட்டிலி, ரசம், சாம்பார்
பவுடர் வகைகள், மைசூர் சுகந்த சிருங்கார் ஊதுபத்தி,
சந்தன சோப், சந்தன முகப்பவுடர், தமிழ் - ஹிந்தி
ஒலிப்பதிவு "கஸ்ஸெட்"கள் முதலியன கிடைக்கும்.









இந்தியக் குடியரசுத் தலைவர் பக்ருதின் அலி அகமது காலமானார். (இடமிருந்து வலது) 2. 1974ல் இந்திய குடியரசுத் தலைவராக ராஜ பவனி செல்கையில். 4. இந்திய பிரித்தானிய நட்புறவு பிரமுகர்கள் சில்வர்மன் தம்பதிகளுடன் - 5. துணைத்தலைவர் திரு.



தமிழ் ஈழத்தின் புத்தளத்தில் கடந்த ஆண்டு 9 தமிழ் முஸ்லீம்கள் சிங்கள போலீசாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள். இதனையொட்டி ஓராண்டு நினைவு அஞ்சலிக்கூட்டம் புத்தளம் மாவட்டத்தில் நடைபெற்றது. (இ — வ) ஜனாப் செய்யது முகமது, ஜனாப் முகமது நயீம், ஜனாப் முகமது இஸ்மாயில் அமீர், ஜனாப் அப்துல் கலீல், ஜனாப் முகமது அன்சார். (படத்தில் இல்லாதவர்கள்: அப்துல் கரீம், ஜனாப் அசன்கண்டு, அப்துல் ரசீது, ஜனாப் அப்துல் ரசாக் ஜயீப்). கீழேயுள்ளது துப்பாக்கிச்சூடு நடைபெற்ற புத்தளம் முகைதீன் ஜும்மா பள்ளிவாசல். ↓






தமிழ் ஈழத்தின் சுதந்திரத்துக்காகக் காரைநகரில் 200நாட்கள் தொடர்ந்து இருந்துவருகின்றார் திரு. ம. கந்தையா.




காசி ஆனந்தனின் சகோதரர்கள் சிவஜெயம், சுதர்சன், மற்றும் வண. ஜோசப் மேரிஅடிகளார், ஜெயராசா, அல்போன்சோ மேரி, மு. வசந்தகுமார், வா. சிவராசா ஆகிய தமிழ் இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டபோது மட்டக்களப்பில் வரவேற்கப்பட்டனர்.




இந்தியத் தேர்தலை நடத்திவைக்கும் தேர்தல் தலைமை அதிபர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பத்திரிகைகளுக்குப் பேட்டி அளிக்கிறார்.







ர்ந்தெடுக்கப்பட்டபோது பிரதமர் இந்திரா காந்தி, மனைவி பேகம் அபிதா ஆகியோருடன் காணப்படுகின்ருர். 3. நாடாளுமன்றத்திற்கு
டி தற்காலிக குடியரசுத் தலைவராகப் பதவியேற்றபோது.



இந்தியக்குடியரசு நாளன்று இராணுவ அணிவகுப்பை ஏற்கின்ருர் காலஞ்சென்ற குடியரசுத்தலைவர் பக்ருதீன் அலிஅகமது அவர்கள்.



தமிழ்ப்பெண்மணியான குமாரி ஜெயலட்சுமி சீனிவாசன் மலையாள சங்கீத உலகில் வெற்றிக் கொடி நாட்டி வருகின்ருர்.



ஈழத்துச் சித்தர் திருநாவுக்கரசு சுவாமிகள் சமயபுரம் கோவிலில் 101இளநீர்களைத் தலையில் அடித்து சிரசாபிஷேகம் செய்யமுன் முன்னள் முதல்வர் எம். பக்தவத்சலம் தொடக்கிவைக்கின்ருர்.



லண்டன் சிறுவன் கண்ணன் நித்தியானந்தன் பிரித்தானிய இந்துக்கோவிலின் முருகன் பூஜையின்போது தமிழில் முருகனைப்பற்றி சொற்பொழிவு ஆற்றினர்.



லண்டனின் இந்தியத் தூதுவர் திரு. நேரு மகாராஷ்டிராவின் ஆளுநராகச் செல்கின்ருர்.



வியட்நாமின் தூதுவராக செல்லும் திரு. சிவராமகிருஷ்ணனுக்கு லண்டனின் இந்திய பத்திரிகையாளர் பாராட்டுவிழா வைத்தனர்.

## SUBSCRIPTIONS TO LONDON MURASU

| | |
|---|---|
| **UK, FRANCE, GERMANY,** SWITZERLAND, HOLLAND & NORWAY | £ 3 - 60<br>FR 35-00 |
| **INDIA, CEYLON, MALAYSIA,** SINGAPORE, MAURITIUS, RE UNION, FIJI, S. AFRICA, KUWAIT, ZAMBIA, U.S.A & CANADA. | £ 5 - 40 (AIR<br>FR45 - 00 MAIL)<br>U.S$10 - 00 |

SUBSCRIPTIONS BY CHEQUE/P.O/M.O/BANK DRAFT MADE PAYABLE TO:

"LONDON MURASU"
8 ASHEN GROVE, WIMBLEDON,
LONDON SW19 8BN.



## MADRAS INDIA
### RESTAURANT

*South Indian Food Speciality*
Open 12 to 3 p.m.
and
6 p.m. to midnight


325 GRAY'S INN ROAD, W.C.1
100 yards from Kings Cross Station

*Speciality:*
IDDLY
VADAI
MASALA DOSAI
SAMBAR
RASAM, etc

Res: 01-837 4544



## RAJESH TRAVELS



LOWEST FARES TO SINGAPORE - BOMBAY
MADRAS- TRIVANDRUM & ALL OVER THE
GLOBE.

PROPRIETOR: DEVADASA PANICKER, 20 CAMPBELL ROAD,
EAST HAM, LONDON E6 [TEL: 01-472 2306]



CORRESPONDENCE:-
45 HOLLAND VILLAS ROAD
LONDON W14 8DH

CABLE:
GEMROOT, LONDON, W14
Tel: 01-602 4191

*M.S.A.J. Maricar*
(FORMERLY OF PITCHAI THAMBYS)
FAMOUS JEWELLERS & WATCH
** DEALERS **
NOW
BUYING AND SELLING
PRECIOUS STONES & DIAMONDS.

LONDON DIAMOND BOURSE
01 - 405 8671

LONDON DIAMOND CLUB
01 - 405 0734

24ம் பக்கத்தின் தொடர்ச்சி

வாரதிருந்தால் இனிநானுன்,வடிவேல்விழிக்கு மை எழுதேன்
மதிவாள்நுதற்குத் திலகமிடேன்,மணியால்இழைத்த பணிபுரியேன்
பேராதரத்தினொடு பழக்கம்பேசேன்,சிறிதும் உன்முகம் பாரேன்
பிறங்கு சுவைப்பால் இனிதூட்டேன், பிறருடன் ஒக்கலையில் வைத்து
தேரார் வீதி வளங்காட்டேன்,செய்யகனிவாய் முத்தமிடேன்
திகழுமணித் தொட்டிலில் ஏற்றி,திருக்கண் வளரச் சீராட்டேன்

பாவம் குமரன்.இந்தப் பிள்ளைத்தமிழ்ப் பாட்டால் ஏற்பட்ட பயத்ினால் போலும், முருகப்பெருமான் இன்று "அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம்தோன்ற,வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்ற" அடியார் குறைதீர்க்க ஓடோடியும் வருகிறார்.

<u>இயற்கைக் காட்சியில் எழுந்த கற்பனையூற்று:</u>

தமிழ் இலக்கியத்தில் கருத்துப் பொலிவும், கற்பனையூற்றும் சுரந்துகொண்டு இருந்ததால் தான்' இருந்தமிழே உன்னால் இருந்தேன்,உமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்' என்று புலவர் இறுமாந்து பாடினார். கற்பனைக் கலைஞன் கையாளும் யுக்தி முறைகளில் மிகவும் முக்கியமானது இவ்வாற்றல் கவிதைகளைக் கற்போரின் மனத்தை விரிந்த பார்வையிற் செலுத்தவல்லது.

காட்டில் நடந்த சாதரண நிகழ்ச்சியைக் கண்டு கற்பனை மெருகேற்றுகிறார் கவிஞர்.அன்று கோடைக்காலம். இருமான்கள் காட்டில் நீர்தேடி அலைந்தன.ஒருசிறிய சுனையிலே நீர் இருக்கக்கண்ட கலைமான், அது இருவருக்கும் போதாதென நினைந்து,பிணையைக்குடிக்கும்படி ஏவியது . காதல்நோய் மான்களை விட்டுவிடுமோ.பிணைமறுத்து முதலில் நீங்கள் என்று பின்னின்றது.தமிழ் மரபு தெரிந்தமானாக இருக்கலாம்! இங்கேதான் கலைமானின் செய்கை கலைஞனின் கற்பனையில் உதயமாகின்றது.தனது பிணையின் மீதுள்ள அன்பினால், தான் குடிப்பதுபோலச் சென்று சுனை நீரில் வாய்வைத்துப் பாசாங்குசெய்து மீண்டகாதல் காட்சியின் கற்பனை எமது தமிழ் உள்ளத்தில் சிறிது உவகையூட்டும் என்பதில் ஐயமில்லை: —

> சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென்று எண்ணி
> பிணைமா இனிதுண்ண வேண்டிக் — கலைமாத்தன்
> கள்ளத்தின் ஊச்சம் சுரம் என்ப, காதலர்
> உள்ளம் படர்ந்த நெறி
> — ஐந்திணை ஐம்பது,38.

உலகியல் வாழ்வில் கேடும் ஆக்கமும்,இறப்பும் பிறப்பும் மாறிமாறி வந்துகொண்டிருக்கும் இயல்பை சங்கப் புலவர் ஒருவர் வானத்தில் உள்ள சந்திரனின் வாழ்விலும் காண்கிறார். இந்த உண்மையை உணர்த்துவதற்காகத்தான் திங்களானது அறியாதவரும் அறியும்படி வானத்தில் பலரும் காணத் திரிவதாகக் கற்பனை காண்கிறார்:—

> மாய்தல் உண்மையும்,பிறத்தல் உண்மையும்
> அறியாதோரையும் அறியக்காட்டி
> திங்கள் புத்தேள் திரிதரும் — புறநானூறு.27

<u>சிலப்பதிகாரம் செப்பும் சீரியகற்பனை:</u>

உலக இலக்கிய வரலாற்றிலேயே முதன்முதல் எழுந்த குடிமக்கள் காப்பியம் சிலப்பதிகாரம். மூவேந்தர் காலத்தில் எழுந்த,முத்தமிழ் நலம்கனிந்த இக்காப்பியத்தை ஒற்றுமைக் கீதம் என்றே கூறலாம்.முன்னை மூவேந்தர் காலத்தும் , பின்னைப் பாவேந்தர் காலத்தும் தமிழர் சீர்குலைந்து வாழ்ந்தது ஒற்றுமையின்மையாலேயே.இன்றைய இருபதாம் நூற்றாண்டில் கூட விழிப்புணர்ச்சியற்று,வயிற்றை நிரப்புதலையே வாழ்வென்று நினைத்துத் தாழ்வடையும் எம் இனத்திற்கு ஒரு சாபக்கேடான இந்த ஒற்றுமையின்மையை இன்றைய தமிழ்நாட்டு அரசியல் நிலை, அந்தோ!உறுது செய்வதுபோற் தோன்றுகிறது.எனவே, கடல்கடந்து வாழும்தமிழர் ஆகுதல் இனம்,மொழி என்ற பற்றுக்கோடு வழியே சென்று ஒன்றி இயங்குவது எமது தலையாயகடன்.நிற்க .

சோழநாட்டில்,கலைமலிந்த பூம்புகார் நகரத்தில் வாழ்வு தொடங்கியவர் கோவலனும் கண்ணகியும். விதியின் சதியால் பாண்டிநாட்டின் தலைநகரமான மதுரையில் வளையாத செங்கோல் வளைந்த காரணத்தால் கோவலன் கொல்லப்படுகிறான்.மதுரையை எரித்தபின் கண்ணகி சேரநாட்டின் வஞ்சிநகரிலே பத்தினித்தெய்வம் ஆகிறாள் . இதுகாப்பியக் கதையின் சுருக்கம்.

காப்பியத்தின் நடுவிலே ஒரு கற்பனைக் காட்சி.. காவேரிபாயும் புகாரைவிட்டு ,மதுரைக்குப்போகும் பாதையிலே வைகை நதியைக் கடக்கின்றகட்டம்.துன்பம், பெருந்துன்பம் கோவலன் கண்ணகியை மதுரையில் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதை, வைகைநதியறிந்து கண்ணீர் வடிக்கிறதாம். இதற்கும்மேலாகச் சென்று, ஆற்றைக் கடந்துபோகும்போது கூட வாரேல் என்று தடுத்து எச்சரிக்கை செய்வது நெஞ்சை உருக்கும் திறனுடையது:—

> வைகை: — தையற்குறுவது தானறிந்தனள் போல்
> புண்ணிய நறுமலர் ஆடைபோர்த்துக்
> கண்ணிறை நெடுநீர் கரந்தனள் அடக்கி
> . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
>
> கொடிகள்: — தையலும் கணவனும் தனித்துறு துயரம்
> ஐயமின்றி அறிந்தவை போல
> போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
> வாரேல் என்பனபோல் மறித்துக்காட்ட

இக்கற்பனை விருந்தைச் சிலப்பதிகாரம் எங்கும் அளித்த இளங்கோ அடிகள் சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத்து அந்தமில் இன்பம் அரசாண்ட போதுகூடச் செந்தமிழ்க் கற்பனை இன்பத்தை மறவாதது எமது அதிட்டம் என்றே சொல்லலாம்.

வாழிய செந்தமிழ். வாழ்க நற்றமிழர்
ஊழிகாலமும் ஒற்றுமைபோற்றி வாழியவே.

-தமிழ்த்திரு. வி. ஞானசூரியன்-

**தமிழ் இலக்கியம் மூலம்**
**வாழ்வில் மறுமலர்ச்சி**

உலகில் அழிவுற்ற நாகரீகங்களை ஆராய்ந்து பார்த்தால் அவை வலிமையில்லாததனால் மட்டும் அழிந்தன என்று கூறமுடியாது. ஆட்படை கொண்ட ரோம் நாடு அழிந்தது. அறிவும், கலையும் மிக்க கிரீஸ்நாடு மாண்டது. உலகுக்கே வழிகாட்டிய எகிப்திய — பாபிலோனிய நடு உலகு வீழ்ந்து பட்டது. இற்றைக்குநாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தலைசிறந்து விளங்கிய எமது சைவத் திராவிட சிந்துநதிப்பள்ளத்தாக்கு நாகரீகமே சீர்குலைந்து இன்று நிலமட்டத்துக்குக் கீழ் நிழலாடிநிற்கிறது. காரணம். கனவார்வம் குன்றியதினாலேயே அவை அழிந்தன. இன்றைய தமிழ் உலகின் வாலிபரும், உள்ளத்துடிப்புள்ளோரும் போற்றும் கருத்துக்களும் காணும்கனவுகளும்தான் எதிர்கால மறுமலர்ச்சிக்கும், தமிழ் கூறு நல்லுலகத்தின் வளர்ச்சிக்கும் ஊக்கம் அளிப்பன; ஆக்கம் தருவன.

கனவுகள் காண்பது குறையல்ல. அறிவுத் துறையில் கனவு கண்டோரே விஞ்ஞான உலகில் அன்றும், இன்றும் சுடர் விடுகின்றனர். கெப்ளர் வானத்தில் கோள்களையியக்கும் விதியைக் கனவு கண்டான். யேம்ஸ் வாட் இயந்திரங்களைக் கனவுகண்டான். பொதுமக்கள் நலன் கருதியோர் கண்ட கனவுகள் இன்னும்பல. ரொபின்சன் குறுசோ புதுத் தீவுகளைக் கனவுகண்டான். பாரதியார் இந்திய விடுதலையைக் கனவுகண்டு அதில் எழுந்தவைதான் அவரது கவியூற்று. கார்ல் மாக்சு சுரண்டல் அற்ற சமதர்ம சமுகாயத்தைக் கனவு கண்டவர். இப்படிக் கனவுகள் கண்டு அதனால் உலகம் முன்னேறிய கதையின் உண்மை எமது செந்தமிழ் உள்ளங்களில் செறிந்து "தம்மின் தம்மக்கள் அறிவுடைமை" பெறச் செயலாற்றுவதே சிறப்பு.

<u>தோற்றுவாய்:</u>

கலைகள் கருத்தைக் கவர்வன; களிப்பைத் தருவன. கலைகளின் அரசி கவிதை. கவிதைக்கு மெருகேற்றுவது கவிஞனின் கற்பனைக் கனவு. கல்லைக் கலையாக்கி அக்கலையில் கடவுளைக்கண்டு போற்றி வழிபடுவோர் நாம். அதேவேளையில், எமது செந்தமிழ் மொழியின் சொல்லைக் கலையாக்கிச் சுடர்விடும் இலக்கியச் செல்வத்தைப் போற்றிப் பாராட்டுவோரும் நாமே. உள்ளக் கிளர்ச்சியையும், அகத்தில் எழுச்சியையும் தருதல் தமிழ் இலக்கியத்திற்குரிய தனிப் பெருஞ் சிறப்பு.

முத்தமிழ் இலக்கியம் என்னும் பரந்த கடலில் நன்முத்துக்கள் பல உள்ளன. புலமை என்னும் ஆற்றல்கொண்டு தமிழ்க் கடலில் புலவர் பெருமக்கள் மூழ்கியெடுத்த முத்துக்கள்பல கவிதை என்னும் அரங்கில் கற்பனைச் சுடர் ஒளி வீசிநிற்கின்றன. இதை அளித்த பெருமக்களுக்கு நன்றிவணக்கம் தெரிவித்து அக்காட்சியைக் கண்டுகளிப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

<u>அயோத்தி நகர்ச் சேவல்கள் சொன்ன செய்தி: —</u>

அன்று மாளிகையில் நள்ளிரவில் நடந்த நிகழ்ச்சி. அதுவும் அப்போதுதான் நடந்து முடிந்தது. பெரிய இடத்து விஷயம். வெளிவருவது என்றால் மிகவும் கடினம். அதுவும்சாதரண விஷயமல்ல. அரசு மாளிகையிலே, அந்தரங்கத்திலே போயும் போயும் படுக்கை அறையிலே நடந்த மர்மம். நடுச்சாமத்தில் நடந்தது — விடியும்வரை பொறுத்திருக்க முடியாத நிகழ்ச்சி.

கடவுளின் படைப்பிலே சில விலங்குகளும், மீன்களும் ஏதோ ஒரு பகுத்தறிவுக்கெட்டாத அபாரசக்தி கொண்டுள்ளது. விஞ்ஞான மனிதனைச் சிறிது பிரமிக்கச்செய்கிறது. சில பறவைகளும் மீன்களும் அச்சக்தியால் பல்லாயிரம் மைல்கள் தாண்டிச் சென்று தம் இனப்பெருக்கத்திற்கென சேர்ந்து பின் முட்டையிட்டு மீண்டும் தம் இல்லங்கள்வந்து சேர்வது ஒரு புதிர். இது தெய்வத்தின் விளையாட்டோ, என்னவோ.

ஆயினும், கற்பனையுலகிலே நாம் பிரமிக்கப்படவேண்டாத நிலையில் எதுவும் நிகழும். கம்பன் தன் கற்பனையாற்றல் கொண்டு அயோத்தி நகரில் வாழும் சேவல்களுக்கு ஒரு உளவறியும் சக்தியைக் கொடுத்து விட்டான். மாளிகையின் படுக்கையறை நிகழ்ச்சியை அச்சேவல்கள் ஏதோ ஒருவாறு அறிந்தன. கைகேயி முதல் வரத்தால் பரதனை நாடாளவும், மறுவரத்தால் ராமன் காடேகவும் கேட்டுப்பெற்று விட்டாள். இந்தக் கொடுமையைப் பொறுக்க மாட்டாது மயங்கி வீழ்ந்து மடிந்தான் தசரதன்.

விஷயம் தெரியாத அயோத்தி மக்கள் கண் அயர்ந்து உறங்குகிறார்கள். சேவல்கள் தெரிந்தும் சும்மா இருக்க முடியுமா? மனங்கலங்கின. நேரமோ நடுச்சாமம். துன்பம் பொறுக்க மாட்டாமல் ஒருசேவல் "குய்யோ! முறையோ!" என்று கூவியது. இதைத்தொடர்ந்து நகரச்சேவல்கள் எல்லாம் தம் வயிற்றில் எற்றி, எற்றி அடித்துக் கூவிக் குரலெழுப்பினவாம்: —

எண்தருங் கடை சென்றயாமம்
இறங்குகின்ற வேலையால்
வண்டு தங்கிய தொங்கல் மார்பன்
மயங்கி விம்மிய வாறெல்லாம்
கண்டு நெஞ்சு கலங்கி அஞ்சிறை
யான காமர் துணைக்கரம்
கொண்டுதம் வயிற்றெற்றி எற்றி
விளிப்ப போன்றன கோழியே.

<u>குழந்தை முருகனுக்குப் பிள்ளைத் தமிழ் மாலை</u>

தேன் உண்டு அனுபவிக்கப் படவேண்டிய பொருள்; அங்ஙனமே கவிதையும் படித்து அனுபவிக்க வேண்டிய ஒன்று. கவிதையின் அனுபவத்தைச் சொற்களால்வரையறைப்படுத்தி, அளந்துகாட்ட முடியாது. "பாவின் நயமெல்லாம், யானும் பகர வல்லனோ; ஆவின் பாற்சுவையை நாழி அளந்து காட்டுமோ" என்று வியந்தவர் கவிமணி.

எங்கும் நிறைந்திருக்கும் இறைவனை தமது அன்பிற்குரிய பிள்ளையாக்கி வழிபடும் முறையில் வந்த இலக்கியச் செல்வம் பிள்ளைத்தமிழ். பெற்ற பிள்ளைக்கு முகம் திருத்திப், பூச்சூடி, பொட்டிட்டு கொஞ்சிக்குலாவி விளையாடும் பேற்றை இறைவனோடு பிணைத்துக் கற்பனை செய்த பாடல்களுக்குத்தான் எத்தனை ஆற்றல்! எவ்வளவு தெய்வீக இன்பம் பொங்கும் அன்பு!

# *R. MAGNIFIQUE* PRÉSENTE



# ANNAKILI

VEDETTES: SUJATHA SIVAKUMAR
SRIKANTH S.V. SUBBIAH

தமிழகத்தில் 200 நாட்கள்
ஓடிய வெற்றிப் படம் !

**LUNDI 11 AVRIL 1977** 14·30H et 17·45H

PROJETERA EN LA SALLE DE LA S.I.E.M.
No 6 RUE ALBERT DE LAPPARENT - PARIS 7°
METRO : SEGUR



# தமிழ்த் தொண்டர்கள்

## தெரிந்த பெயர் தெரியாத செய்திகள்

## 17. வண. தனிநாயக அடிகளார்



வண. தனிநாயக அடிகளார்

உலகத் தமிழாராய்ச்சி மாநாடு என்றவுடன் நமக்கு முதன்முதலில் அருட்டிரு தனிநாயக அடிகளாரைப்பற்றிய நினைவே தோன்றும். 1966ம்ஆண்டு அவர் தம் சீரிய முயற்சியாலேயே மலேசியாவின் கோநகரான கோலாலம்பூரில் முதலாம் உலகத்தமிழாராய்ச்சி மாநாடு சிறப்புறநடைபெற்றது. அதன் விளைவாக உலகமக்கள் தமிழரின் இலக்கிய வளத்தையும், நாகரீகச் சிறப்பையும் உயரிய கொள்கைகளையும் அறிந்து போற்றி மகிழ்ந்தனர்.

### தோற்றமும் கல்வியும்

"விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்ற பழமொழிக்கு ஏற்றவாறு 2.8.1913ல் ஊர்காவற்றுறையில் தோன்றிய அவர், தொடக்க உயர்நிலைக்கல்விக்குப்பின் யாழ்ப்பாணம் புனித பேட்ரிக் கல்லூரியில் பயின்று 1930ம் ஆண்டில் சீனியர் கேம்பிரிட்சத் தேர்வில் ஆங்கிலம், வரலாறு ஆகிய பாடங்களில் சிறப்புத் தகைமை பெற்றுத் தேறினர். பேச்சுப்போட்டியில் தங்கப்பதக்கம் பெற்றதும், பள்ளிச் செய்தி இதழுக்கு ஆசிரியராகப் பணியாற்றியதும் அவர்தம் நாவன்மைக்கும் எழுத்தாற்றலுக்கும் தக்க சான்றுகளாகும். பின்னர் கொழும்பு புனித பெர்னார்டு சமயக்கல்வி நிலையத்திலும் உரோமாபுரி பொன்டி பிகல் பல்கலைக்கழகத்திலும் பயின்று 1939ம்ஆண்டில் டி.டி எனும் சமய முனைவர் பட்டம் பெற்றார். அக்காலை பயின்ற பாடங்கள், மொழிகள் அவை: தமிழ், சிங்களம், எபிரேயம், கிரேக்கம், இத்தாலியமொழி, ஐரோப்பியக்கலை, **தொல்பொருளாய்வு போன்றவாம்.**

1940ம் ஆண்டுமுதல் 1945வரை உயர்நிலைப்பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணியாற்றிய பின், அண்ணாமலைக் கழகத்தில் சேர்ந்து எம்.ஏ. எம்.லிட். என்னும் பட்டங்களைப்பெற்றார். செந்தமிழ்க் காவலர் அ. சிதம்பரநாதன் அவர்களின் மேற்பார்வையின் கீழ் எம்.லிட் பட்டம்பெற அவர் மேற்கொண்ட ஆய்வுத்தலைப்பு பழங்காலத் தமிழ்ப் பாக்களின் இயற்கை என்பதாம்.

பின்சர் ஈராண்டுகள் வட, தென் அமெரிக்க நாடுகள், ஐப்பான் முதலிய நாடுகளிலுள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களில் சொற்பொழிவாற்றித் திரும்பிய அவர், இலங்கைப் பல்கலைக்கழகக் கல்வித் துறையில் விரிவுரையாளராய்ப் பொறுப்பேற்றார். 1954, 55 ஆண்டுகளில் அவர் ஆசிய அறநிலையத்தின் சார்பில் மலேயா, சிங்கப்பூர், இந்தோனேசியா, தாய்லந்து வியத்நாம் ஆகிய நாடுகளுக்குச் சென்றுவந்தபின், லண்டன் பல்கலைக்கழகத்தில் "பழங்கால தமிழ்க் கல்வியும் ஐரோப்பியக் கல்வியும்" என்னும் தலைப்பில் ஆய்வு நிகழ்த்தி 1957ல் பி.எச்.டி (பண்டாரகர்) பட்டம் பெற்றார். 1957 முதல் 1960வரை மீண்டும் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலை, சென்னை, அண்ணாமலைப்பல்கலைக்கழகங்களில் சொர்ணம்மாள் நினைவு அறக்கட்டளைச் சிறப்புச் சொற்பொழிவாற்றினர். பின்னர் அமெரிக்கா, கனடா, ஜெர்மனி, இத்தாலி, ஸ்காந்திநேவியா, உருசியா போன்றநாடுகளில் முதியோர்க் கல்வி பற்றி ஆய்வுச் சுற்றுலா மேற்கொண்டார்.

1961ம்ஆண்டு மலேயாப் பல்கலைக்கழக இந்திய மொழித்துறைத் தலைவராகப் பொறுப்பேற்று, 1966–67 ஆண்டுகளில் கலைத் திணைக்கள கணக்காளராக அமர்ந்தார். 1966ல் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு செவ்வையாய் நடைபெற முழுமுதற் காரணமாயிருந்த இவர், 1969ல் அப்பல்கலைக்கழகத்தினின்றும் ஓய்வு பெற்றுப் பாரிசுப் பிரெஞ்சுக் கல்லூரியில் வருகைதரும் பேராசிரியராகப் பணியாற்றிப் பின், ஐரோப்பிய நூலகங்களைப் பார்வையிடச் சுற்றுலா மேற்கொண்டார். அக்காலை ஸ்டாக்ஹோம் பல்கலைக்கழகம், ஸ்காண்டிநேவியாவின் ஆசியமொழிக் கழகம் ஆகியவற்றில் சிறப்புப் பேராசிரியராகவும் பணியாற்றினர்.

### அடிகளார் செல்லாத நாடில்லை; கற்காத மொழியில்லை.

ஆகவே தம் வாழ்வில் 5ஆண்டுகளை ஐரோப்பாவிலும், 2ஆண்டுகளை இங்கிலாந்திலும் ஈராண்டுகளைத் தென் வட அமெரிக்காவிலும் பத்தாண்டுகளை இந்தியாவிலும் கழித்த தனிநாயக அடிகளார் ஜப்பான், தென்கிழக்காசியா, மத்தியக்கிழக்கு, வடஆபிரிக்கா, மத்திய ஆபிரிக்க நாடுகளில் விரிவாகச் சுற்றுலா மேற்கொண்டிருக்கிறார் உருசியா உட்பட எல்லா முகாமையான பல்கலைக்கழகங்களிலும் பயின்றிருக்கிறார். அவர் அறிந்த மொழிகளோ, தமிழ், ஆங்கிலம்,, இலத்தீன், பிரெஞ்சு, இத்தாலியம், இசுபானியம், செருமனியம், எபிரேயம், கிரேக்கம், சமஸ்கிருதம், போர்த்துகீசு, உருசியம், மலாய், சிங்களம் என்பனவாம்.

### சொல்லின் செல்வர், எழுத்தாற்றல் மிக்கவர்

எழுத்தாற்றல் மிக்க இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதிய நூற்கள் ஒன்றே உலகம் போன்ற பலவாம். இயற்றிய ஆய்வுக் கட்டுரைகளோ எண்ணிலடங்கா. தமிழ்ப்பண்பாடு என்னும் பொருள்தரும் ஆங்கில முத்திங்கள் இதழில் ஆசிரியராக அமர்ந்து 1952முதல் 1967வரை பன்னிரு மடலங்களாக வெளிக்கொணர்ந்தார். உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் அரையாண்டு வெளியீடான தமிழ் ஆய்விதழுக்கும் (INTERNATIONAL TAMIL RESEARCH) 1969ம்ஆண்டு ஆசிரியராகத் திகழ்ந்திருக்கிறார்.

தமிழ்க் கலைக் களஞ்சியத்தில் வீரமா முனிவர் பற்றி எழுதியுள்ள இவர், தமிழ், போர்த்துக்கீசிய அகராதியொன்றையும் தொகுத்திருக்கிறார். இந்தியா, இத்தாலி, அமெரிக்கா, இலங்கை, இங்கிலாந்து, மலாயா, ஆகியநாட்டுத் தாளிகைகளெல்லாம் இவர்தம் எழுத்தோவியங்களைத் தாங்கியுள்ளன. பி.பி.சி, வத்திக்கன், அனைத்திந்திய வானொலி, மலேசிய சிங்கப்பூர் வானொலி தொலைக்காட்சிகளில் இலக்கிய இன்மொழிவு நிகழ்த்தியுள்ளார்.

ஈடுபாடும் எதிர்காலத்திட்டமும்

கீழை, மேலை நாட்டுப் பண்பாட்டுத் தொடர்பு, இலக்கியப் பண்பாட்டினை ஒப்புநோக்கல், பயணம், சிறுபான்மையோரின் பிரச்சனைகள் போன்றவற்றில் சிறப்பான ஈடுபாடுகொண்டுள்ள இவர், கி.பி 1825 வரையான தமிழ் எழுத்துக்களின் வரிவடிவம், இத்தாலி தென்கிழக்காசிய நாடுகளுக்கிடையே பண்டைக்கால முதல் இன்றுவரை இருந்துவந்துள்ள உறவு, இலங்கைத்தமிழர், தமிழர் வாணிகத்தின் குறிப்பான சில பகுதிகள் ஆகியவை பற்றி ஆய்ந்து நூல் எழுத முற்பட்டுள்ளார்.

அடிகளார் நீடு வாழ்கவென வாழ்த்துவோம்; தமிழன்னையை இறைஞ்சுவோம்.

- தமிழ்மணி அரங்க முருகையன்.

தனிப்பட்டவர்கள் பற்றி......



## அன்புள்ள ஆசிரியருக்கு

பொங்கல் மலரில் "தனிப்பட்டவர்கள் பற்றி" என்ற தலையங்கத்தில் அருள் எழுதிய கடிதத்தைப் பார்த்து ஆச்சரியமடைந்தேன். ஏனென்றால் "தனிப்பட்டவர்கள் பற்றிக் குறிப்பிட்டு வாசகர்கள் இனிக் கடிதங்கள் எழுதாமல் இருப்பதும், அப்படியான கடிதங்களை ஆசிரியர் வெளியிடாது இருப்பதும் நல்லது" என்று எழுதியிருக்கிறார். இது ஓரளவுக்கு உண்மையாக இருந்தாலும், எடுத்த எடுப்பில் கொஞ்சமும் யோசனையின்றி தடைவிதிப்பது நல்லதா? MIKE YARWOOD-IN- PERSON என்ற நிகழ்ச்சியையும், WHO-DO-YOU-DO' என்ற நிகழ்ச்சியையும் லண்டன் T.Vயில் அருள் பார்த்திருக்க மாட்டார் போலும்! இதுவரை MIKE YARWOOD க்கு யாரும் தடைவிதித்ததாக எனக்குத் தெரியவில்லை. இங்கிலாந்திலும் வெளிநாடுகளிலுமுள்ள ஆயிரக்கணக்கான வாசகர்களுக்கு நன்றாகத் தெரிந்த 'லண்டன் முரசு' ஆசிரியரைப் பற்றி நான் இப்படி எழுதியதால் இவருடைய மதிப்பு என்றும் குறைந்துவிடப்போவதில்லை. அடிக்கடி MIKE YARWOOD என்பவரின் கேலிக்குப் பாத்திரமாகும் இங்கிலாந்துப் பிரதம மந்திரி அதுபோல் என்னும் எத்தனையோ பேர்கள்! என்ன இவர்களுடைய மதிப்பு இதனால் குறைந்துவிட்டதா? பல ஆங்கிலப்படங்களில் நடித்துள்ள YUL BRYNER என்பவரும், அடிக்கடி T.Vயில் வரும் KOJAK என்பவருக்கும் நடிப்புக்குப் பெரும் அம்சமாக அமைந்ததே இவர்களுடைய மொட்டைத்தலைதான்! வழுக்கை விழுவது "அறிவுக்கு அறிகுறி" என்பார்கள் சிலர். ஆனால் அறிவு முதிர்ந்தால் முடிகள் உதிரும் என்பது என்கருத்து. இப்படிப்பட்ட நல்ல எண்ணங்கள் கொண்ட நான் 'லண்டன் முரசு' ஆசிரியரின் மனதையும், வாசகர்களின் மனதையும் புண்படுத்தும் நோக்குடன் எழுதவில்லை. நகைச்சுவையென்ற முறையில் எழுதியதுதான் என் கடிதம்.

SOUTH NORWOOD, LONDON SE25

திருமதி யோகம் நமசிவாயம்.

